
நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

ஆசிரியர்
வி.என். சிதம்பரம்

ஜனவரி-2000



கோனாபட்டு S.M.R.S. சுப்பையா செட்டியார் பேட்டி


தரமான பட்டு, பாரம்பரியப் பட்டு,
ராஜ்மஹால்-ன்
ராசியானபட்டு.
அனைத்து ரக பட்டு மற்றும்
ஃபேன்சி பட்டு சேலைகளுக்கு
ராஜ்மஹால்
37, வெங்கலக் கடைத் தெரு, மதுரை—625001. போன்: 622647
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்
SASI / MDU / 99

நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

குரல் 18 ஒலி 12

பிரமாதி தை

ஜனவரி 2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம் செட்டியார்



கோவையிலே எந்நாளும் கொடிகட்டிப் பறப்பவர்கள்
சேவையிலே சிறந்தவர்கள் திருமாலாய் உயர்ந்தவர்கள்
ஆவலுடன் அறப்பணிகள் அன்றாடம் செய்பவர்கள்
காவலராம் சுப்பையா காவிரிபோல் வாழியவே!

- கவிஞர் காசு. மணியன், கோவை

உள்ளே ...

108–109, நேதாஜி சாலை, அறை எண்: 12 மாடி
மதுரை – 625 001. தொலைபேசி: 746206

புத்தாயிரத்தாண்டு . தமிழர் திருநாள் வாழ்த்துக்கள்...

வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த புத்தாயிரத்தாண்டு, தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்... தங்களின் மேலான ஆதரவினால் குரல் உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. தங்களின் ஆதரவிற்கு நன்றி. எமது அலுவலகத்தில் பணியாற்றுபவர்களுக்கும், அச்சுகோர்த்து தரும் சுரபி கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டிங் செய்து தரும் ஓரியண்ட் நிறுவனத்திற்கும் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்...

— ஆசிரியர் வி.என். சிதம்பரம்

புகைப்படம் . . .

15 பேர்களைச் சந்தாதாரர்களாக சேர்த்துக் கொடுக்கும் அன்பரின் புகைப்படத்தை வெளியிடுவதோடு ஓராண்டுக்கு அவர்களுக்கு இலவசமாக நகரத்தார் குரல் அனுப்பி வைக்கப்படும். 15 சந்தா சேர்த்து அனுப்புபவர்கள் உங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படமும் அனுப்பி வையுங்கள்.

வாசகர்களே!

நம் நகரத்தார்களில் வள்ளல்கள், பிரபலங்கள், அரசியல்தலைவர்கள், கலைஞர்கள் இவர்களுடன் நம்மவர்கள் பற்றிய பழைய அரிய புகைப்படங்கள், அவர்களைப் பற்றிய கட்டுரைகள், துணுக்குகள் தங்களிடம் நிச்சயம் இருக்கும். அவற்றை நகரத்தார்குரலுக்கு அனுப்பி வையுங்கள். அரியனவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிடுகிறோம்.

ஆச்சிமார்களே...!

செட்டிநாட்டுச் சுவையான **'சமையற் குறிப்புகள்'** பகுதி வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து ஆச்சி மார்களும், சமையல்கலை வல்லுனர்களும் உடனே எழுதுங்கள்.

1-4-99 முதல் புதிய கட்டணம்

சந்தா விவரம்

ஆண்டு சந்தா (உள்நாடு)	ரூ.	60.00
ஆண்டு சந்தா (வெளிநாடு)	ரூ.	600.00
ஆயுள் சந்தா (உள்நாடு)	ரூ.	500.00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	ரூ.	3000.00

விளம்பரக்கட்டணம்

வெளி அட்டை (கலர்)	ரூ.	3000.00
உள் அட்டை (கலர்)	ரூ.	2000.00
முழுப்பக்கம்	ரூ.	1000.00
அரைப்பக்கம்	ரூ.	500.00
கால் பக்கம்	ரூ.	250.00
படத்துடன் செய்தி		
முழுப்பக்கம்	ரூ.	1200.00
" " அரைப்பக்கம்	ரூ.	600.00
" " கால்பக்கம்	ரூ.	300.00
வரி விளம்பரம் 3 வரிக்கு	ரூ.	180-00

தொகை M.O. D/D. மூலமாக அனுப்பலாம். D/D. M.O அனுப்புபவர்கள் **"Nagarathar Kural"** என்ற பெயரில் அனுப்ப வேண்டும். தபால் செலவு, பேப்பர் செலவுகள் அதிகரித்து விட்டதால் கட்டணங்களை உயர்த்தும் சூழ்நிலை ஏற்பட்டது. வாசகர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

ஆசிரியர் பக்கம்

பெருமைக்குரிய நகரத்தார்

நகரத்தார்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக பாய்மரக் கப்பலிலே சிங்கப்பூர், மலேசியா, பர்மா, செய்கோன், இலங்கை முதலிய நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து வந்தனர்.

அந்த நாடுகளில் கடைவைத்து வியாபாரங்களைப் பெருக்கி நல்லநிலைக்கு உயர்வு பெற்றவுடன் தாய்நாட்டிலிருக்கும் தங்களது உறவினர்களை வருத்தி அவர்களுக்கு தங்களின் வணிக நிறுவனங்களிலே வேலை கொடுத்தும் பிறகு அவர்கள் முன்னேறுவதற்கு பணமும் கொடுத்து தனியாக தொழில் முனைவதற்கும் உதவி வந்தார்கள்.

அண்ணன் கடை வைத்து முன்னேறியதும், தம்பியை வருத்துவது, மாமியார் வீட்டிலுள்ள மைத்துனர்களை வருத்துவது என்று இப்படி உறவினர்களை அழைத்து அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், குடும்பம் முன்னுக்கு வருவதற்கும் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

அப்படிச் சென்று முன்னேறியவர்கள் தங்களை அழைத்து வந்து தங்களையும் தங்களின் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கும் உதவியவர்களுக்கு மிகவும் நன்றியோடு இருந்து வந்தார்கள். அதனால் பலர் செழிப்பாக, வளமையோடு வாழ முடிந்தது.

இப்பொழுது அந்த எண்ணங்கள் குறைந்து விட்டதாகவே நான் கருதுகிறேன்.

நம்மவர்கள் கடைப்பிடித்த இந்த வழக்கத்தை நம்மைப் பின்பற்றி இப்போது நாடார் இனப்பெருமக்கள் செய்து வருகிறார்கள் என்று அறிகிறேன்

நகர விடுதி என்று வைத்து நற்பணிகள் செய்வது போலவே நாடார் பெருமக்களும் உறவின்முறை என்று வைத்து நற்பணிகளை ஆற்றி வருகிறார்கள்.

அவர்களில் யாராவது கடைவைத்து வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டு நொடித்துப் போனால் அவர்களைப் புறக்கணிக்காமல் தங்கள் கடைகளிலுள்ள பொருட்களை கடனுக்கு கொடுத்தும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக உதவி வருகிறார்கள். உதவி பெறுபவர்களும் உதவுகின்றவர்களுக்கு நன்றியோடும் விசுவாசத்தோடும் இருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

நம்மவர்களில் சில ராசிகளும் உண்டு. சில மருமகள் வந்த நேரமும், சில மாப்பிள்ளை வந்த நேரமும் அந்தக் குடும்பங்கள் மிகச்சிறப்பாக, செழிப்பாக உள்ளதையும் நான் பார்த்திருக்கிறேன்.

அந்தக்காலத்தில் இருந்ததைப்போல இப்போது பலர் இல்லையென்றாலும் சிலர் இருக்கிறார்கள். அந்தச் சிலரில் இப்போது எனக்குத் தெரிந்தவரையில் குறிப்பிடத் தக்கவர் நச்சாந்துபட்டி என்ஜினியர் சுப.கி.ரகுபதி சுப்பிரமணியன் அவர்களின் குடும்பம்.

இரண்டாம் மகாயுத்தத்திற்கு முன்பு மலேசியாவில் சிறப்பாக, செழிப்பாக வாழ்ந்தவர்கள் யுத்தத்தினாலேயே அந்தக் குடும்பம் தளர்ச்சியுற்று, நொடித்து போயிருந்த நேரத்தில் ரகுபதி இடிந்து போய் உட்கார்ந்து விடவில்லை. கல்வியில்

திறமை பெற்று படித்து தங்கமெடலெல்லாம் பெற்று தனது திறமையால் கடும் உழைப்பால் உயர்ந்து கனடா நாட்டிற்குச் சென்றார். அங்கு சிறப்பாகப் பணியாற்றி சம்பாதித்து அங்கே வீடுகள் எல்லாம் வாங்கினார்.

தான் மட்டும் வசதியாக வாழ்ந்தால் போதாதென்று தனது மைத்துனரையும் கனடாவிற்கு வருத்தி. அவரும் மிக செழிப்பாக வளமையாக வாழ்வதற்கு உதவியிருக்கிறார். ராயவரம்" வெஸ்ட் வயிரவன் செட்டியார் மகள்தான் ரகுபதியின் மனைவி.

தற்போது சிங்கப்பூரிலேயே யூனிவர்சிட்டி ஒன்றில் பேராசிரியராக பணியாற்றுகிறார் ரகுபதி. அவருடைய மகன், மகள், மாப்பிள்ளை எல்லோரும் கனடாவில் உள்ளனர். தனது சகோதரி மகளையும் சிங்கப்பூருக்கு அழைத்து நல்ல வேலையிலும் அமர்த்தியிருக்கிறார். 200 ஆண்டுகளுக்கு முன்பு நகரத்தார் எப்படி உறவினர்களுக்கு வெளிநாட்டிலிருந்து உதவினார்களோ அந்தப் பண்பாட்டைப் பின்பற்றி வரும் ரகுபதி சுப்பிரமணியம் அவர்கள் ஒழுக்கம், மிகஅமைதி, அடக்கம், அதிர்ந்தும் பேசாத தன்மை, பெரிய சிந்தனாவதியாக திகழ்பவர்.

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற பழமொழிக்கேற்ப தனது உறவினர்களை காத்து வரும் அவரிடம் உதவி பெற்றவர்கள் அவருக்கு உதவியாகவும், நன்றியோடும் இருந்து வருகிறார்கள். இந்தப் பண்பாட்டையும் பாராட்டவேண்டும்.

திறமையும், ராசியும் ஒருங்கே அமையப் பெற்ற ரகுபதி சுப்பிரமணியன் அவர்களை பெருமைக்குரிய நகரத்தார் என மனதாரப் பாராட்டுகிறேன்.

கனடா நாட்டிற்கு நகரத்தார் நண்பர்களோ, உறவினர்களோ வருவதாக அவர் அறிந்துவிட்டால் உடன் வந்து சந்தித்து அவர்களை தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரிப்பதிலே மிகுந்த ஆர்வம் நிறைந்தவர்.

நான் 1981-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றபோது கனடாவிலிருந்து என்னுடன் தொடர்பு கொண்டு என்னை அவரின் இல்லத்திற்கு அழைத்துச் சென்று ஒருவாரம் தங்கவைத்து, உபசரித்து தனது காரையும் கொடுத்து சுற்றிப்பார்க்க அழைத்துச் சென்றதையும் என்னால் என்றும் மறக்க இயலாத ஒரு நிகழ்வு. நான் மலேசியாவிற்குச் சென்றால் அவர் சிங்கப்பூருக்கு அழைத்து விருந்து வைத்து உபசரித்து சிறப்பிப்பார். நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற பலருக்கும் இந்த் உபசரிப்பு நிச்சயம் உண்டு. அவர் வாழ்ந்தால் பலகுடும்பங்கள் வாழும் என்பது மட்டும் உண்மை. அவர் வாழ்க... வளர்க... என்று வாழ்த்துவதிலும் பாராட்டுவதிலும் பெருமைப்படுகிறேன்.

சில மாப்பிள்ளைகள் காலடி எடுத்து வைத்தநேரம் மாமியார் வீடு காணாமல் போய்விடும். தெய்வபலத்தால் அந்தக் குடும்பம் நிலைத்து நின்றாலும் கோர்ட்டு, வழக்கு என்று வழக்குப் போட்டே மாமியார் வீட்டை அழிக்க நினைப்பார்கள்.

கடுகளவு உதவியிருந்தாலும் மலையளவு உதவியாக கருதி நன்றி கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

மலையளவு உதவியிருந்தாலும், கடுகளவுகூட மனதில் கொள்ளாத நன்றி கொன்றவர்களும் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது நெஞ்சம் கனக்கத்தான் செய்கிறது. என்ன செய்வது...? நாம் நல்லவற்றைச் சிந்திப்போம்... நல்லவைகளையே செய்வோம்...

- வீ.என். சிதம்பரம்

௬ நகரத்தார் வாழ்வும் வாக்கும்

--- சொ.சொ.மீ. சுந்தரம் ---

பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழார் சுவாமிகள் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள திருநாகேச்சுவரத்தில் ஒரு சிவன் கோயில் கட்டி வைத்தார். அடியார்களுக்கு ஒரு சொற்கோயிலும் ஆண்டவனுக்கு ஒரு கற்கோயிலும் கட்டியவர் என்று சைவப் பெருமக்கள் சேக்கிழாரைப் பாராட்டினார்கள். இதுபோல எழுபத்தாறாண்டுகள் வாழ்ந்து, பழந்தமிழ் நூற்களைப் பரப்பி, தானும் புதிய நூற்களை இயற்றிச் சிவன்கோயில் திருப்பணியும் செய்து நகரத்தார் பெருமக்களின் சேக்கிழாராக விளங்கியவர் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார் அவர்கள்.

1967-ல் இராமநாதபுரத்தில் பாண்டித் துரைத்தேவர் நூற்றாண்டு விழா நடந்தது. விழாவுக்கான ஏற்பாடுகளை முகவை மன்னர் இராமநாத சேதுபதி, சரித்திர ஆராய்ச்சியாளர் கமால், முகவை மங்களசாமி ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தார்கள். தமிழ்க்கடல் இராய. சொ. அவர்கள் கவியரங்கத்திற்குத் தலைமை ஏற்றார்கள். கவிஞர்களில் ஒருவர் சடையப்ப வள்ளலைப் பற்றிப் பாடினார். எல்லாக் கவிஞர்களும் எழுதி வந்த கவிதையை எடுத்துப் பார்த்துப் படித்தார்கள். இந்தக் கவிஞர் ஏடில்லாமல், சுமார் இருபது மணித்துளிகள், இயல்பாகக் கவிதை பாடினார். அப்படிப் பாடியதற்கு அவர் கூறிய காரணம் மிகச் சிறப்பாக இருந்தது.

பாடுதற்கு நான் வந்தேன் கவியரங்கில்
பாட்டெல்லாம் எண்ணிஎண்ணி எழுதிவைத்த
ஏடெடுத்து வருவதற்கு மறந்து விட்டேன்
இருந்தாலும் அதற்காக வருந்த வில்லை
பாடவைக்கும் தமிழ்க்கடலின் பார்வை பட்டால்
பாட்டென்ன காவியமே உருக்கொள்ளாதோ?

என்று கேட்டு, "தமிழ்க்கடலின் பார்வை பட்டதால் நான் மனத்தில் எண்ணியதை ஏடின்றிப் பாடுகிறேன்" என்று கூறிக் கவி பாடியதைக் கேட்ட அவை மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தது. தமிழ்க்கடலைப் புகழ்ந்து முன்னாளில் தமிழ்நூற்களைக் கடல், கொண்டதே தவிரக் கொடுக்கவில்லை. இன்று தமிழ்க்கடல் தமிழ் கொடுக்கிறது என்று அக்கவிஞர் பாடினார்.

கொள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால்-நூல்
கொடுக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை
அள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால்-நூல்
அளிக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை

என்று அக்கவிஞர் பாடக்கேட்ட தமிழ்க்கடல் இராய. சொ. அவர்கள் கசிந்துருகி மனம் நெகிழ்ந்து அக்கவிஞரை மனமாரப் பாராட்டினார்கள். "எனக்குப் பல தமிழ்நூற்கள் மனப்பாடமாகத் தெரியும். ஆனால் நான் எழுதிய பாடல்கள் எனக்கு மனப்பாடமாகத் தெரியாது. இவர் தன் கவியைத் தானே ஏடின்றி எடுத்துக் கூறிய திறன் மிகச் சிறப்பானது. இவர் வாக்கு வளமான வாக்கு" என்று வாழ்த்தினார்கள். "சொக்கலிங்கனார் கல்வி கேள்வி உடையவர். ஆராய்ச்சியாளர். காய்தல், உவத்தல் இன்றி எதையும் சிந்தித்து முடிவு காண்பவர்" என்று தமிழ்ச்சான்றோர் திரு.வி.க.வால் பாராட்டப் பெற்றவர் தமிழ்க்கடல். அவரால் பாராட்டப்பெற்ற அந்தக்கவிஞர், மேலும் வளர்ந்து,

தன்னுடைய தவப்பயனால், இப்பொழுது இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கிறார்.

பாண்டித்துரைத்தேவர் நூற்றாண்டு விழாவுக்கு வந்த தமிழ்க்கடலார் இராமநாதபுரத்தில் மங்களசாமி ஐயாவின் வீட்டில் தங்கியிருந்தார்கள். நானும் அவர்களோடு தங்கியிருந்தேன். ஐயா அவர்கள் பெரியநயினார் கோயிலுக்குச் சென்று நாகநாதசுவாமியை வழிபட விரும்பினார்கள். இதற்காக இராமநாதபுரம் மன்னர் இராமநாதசேதுபதி அவர்கள் கார் அனுப்பியிருந்தார்கள். நாங்கள் காரில் புறப்பட்டுச் சென்றோம். பாதி வழியில் ஒரு தென்னந்தோப்பு. மூன்றுபேர் கைகளில் அரிவாள்களோடு நின்று வழிமறித்தார்கள். ஓட்டுநர் சிறிது தூரம் தள்ளி வண்டியை நிறுத்தினார். எங்களுக்கு மிகுந்த அச்சமாகி விட்டது. அந்த மூவரும் வண்டியை நோக்கி ஓடிவந்தார்கள். நாங்கள் பயத்தோடு கீழே இறங்கினோம். அவர்கள் ஓட்டுநரைப் பார்த்து, "ராஜா வரவில்லையா?" என்று கேட்டார்கள். ஓட்டுநர் "ராஜா வரவில்லை. இவர்கள் மன்னருக்கு மிகவும் வேண்டியர்கள். நாங்கள் நயினார் கோயிலுக்கு செல்கிறோம்" என்றார். வந்தவர்கள் எங்கள் பக்கம் திரும்பினார்கள். தமிழ்க்கடல் ஐயாவை வணங்கி "ஐயா! மன்னர் காரைப் பார்த்ததும் ஓடி வந்தோம். தோப்பில் இளநீர்க்காய்களை வெட்டிக் கொண்டிருந்தோம். மன்னர் எங்கள் தெய்வம். அவருக்கு இளநீர்க்காய்கள் கொடுக்கத்தான் வண்டியை நிறுத்தினோம். அவருக்கு வேண்டிய தமிழ்ப் பெரியவராகிய நீங்கள் இளநீர் குடித்துவிட்டுத்தான் செல்லவேண்டும்" என்று அன்புக்கட்டளையிட்டார்கள். தமிழ்க்கடல் அவர்கள் "சேதுபதி மன்னரின் பெருமையையும், இந்தக் குடிமக்களின் பேரன்பையும் பார்த்தீர்களா?" என்று கேட்டு வியந்து பாராட்டினார்கள். நாங்கள் குடிக்கக் குடிக்க இளநீர் தந்து எங்களை இளநீர் குடிக்க வைத்தார்கள் - இல்லை - இளநீரில் குளிக்க வைத்தார்கள், கள்ளங்கபடமில்லாத அந்தக் கிராமத்து மக்கள்.

தமிழ்க்கடல் ஐயாவுக்கு இராஜயோக ஜாதகம் என்று கூறுவார்கள். அவர்களைச் சுற்றி மன்னர்களும் செல்வந்தர்களும் அமர்ந்திருந்து தேவாரம், திருவாசகம், கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், தனிப்பாடல்கள் எல்லாம் கேட்பார்கள். அவர் வீட்டில் கார் இல்லை. ஆனால் அவர் வீட்டு வாசலில் கார் இல்லாத நேரமில்லை.

காந்தியடிகளைத் தன் தெய்வமாகப் போற்றினார் இராய. சொ. செட்டிநாட்டில் சுற்றுப்பயணம் செய்த காந்தியடிகள் தமிழ்க்கடல் வீட்டில் விருந்துண்டார்.

விதுரன் வீட்டுக்குக் கண்ணன் வந்தபோது "என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்" என்று விதுரன் மகிழ்ந்தது போலத் தமிழ்க்கடல் மகிழ்ந்து "எம்மை ஆளுடைநாயகன் விருந்தினுக்கு இசைந்தான்" என்று கொண்டாடினார்.

நகரத்தார் சமூகத்தின் முதல் விடுதலைப் போராட்டவீரர் இராய. சொ. அவர்கள். விடுதலைப் போராட்டத்தின் செட்டிநாட்டு இதழான ஊழியன் என்ற இதழை இருபதாண்டுகள் நடத்தி சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று வேலூர்ச்சிறையில் இருந்து நகரத்தார்களில் சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்ற முதல்வர் என்ற பெருமையைப் பெற்றார். காரைக்குடி நகரவைத் தலைமை ஏற்றுக் காந்தி மாளிகை கட்டினார். நாகநாதபுரம் சிவன் கோயிலுக்கும் பெருமாள் கோயிலுக்கும் திருப்பணி செய்தார். தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கும் ஆழ்வார்கள் பாடிய வைணவத் திருத்தலங்களுக்கும் சென்று வந்தார். தம்முடைய சொத்துக்களை பாரதி பாடிய காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்திற்கு எழுதி வைத்தார்.

மலேயாவுக்கும் பர்மாவுக்கும் சென்று தமிழ் பரப்பினார். பழனி ஈசானிய சிவாசாரிய சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுச் சிவபூஜை எடுத்துக் கொண்டார்.

தமிழ்கடலார் தம் வாழ்நாள் முழுவதும் திரட்டிப் பேணிப் பாதுகாத்த தமிழ்நூற்கள் ஆயிரக்கணக்கானவை. அவை அனைத்தையும் அழகப்பா கல்லூரிக்கு வழங்கினார். அப்பொழுது இதைப் பாராட்ட வந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்கள், "மற்றவர்கள் தம்முடைய நூற்களை நன்கொடையாகத் தந்தால் அது பெருமை. தமிழ்க்கடல் தந்தால் அது பெருமை இல்லை. ஏனென்றால் இந்த நூற்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகத் தெரியும். இவ்வளவு பாடம் செய்தவருக்கு இனி இந்த நூற்களால் என்ன பயன்? தனக்குப் பயன்படாததைத் தந்து விட்டார் இராய. சொ." என்று சுவையாகக் குறிப்பிட்டார்கள்.

இலக்கியத்தின் ஒரு தொடரை விளக்கும்போது அதற்கு இணையான தொடர்களைப் பிற இலக்கியங்களிலிருந்து எடுத்து மேற்கோள் காட்டும் பேராற்றல் பெற்றவர்கள் தமிழகத்திலேயே உ.வே.சாமிநாத ஐயரும் தமிழ்க்கடல் இராய.சொ. ஐயாவும் தான் என்பது தமிழ் உலகம் அறிந்த உண்மை. நாட்டுப்பற்று மொழிப்பற்று தெய்வப்பற்று மூன்றிலும் தன்னிகரற்றவரான தமிழ்க்கடல் ஐயா அவர்கள் நமக்கு ஏற்ற முன்னோடியாக விளங்குகிறார்கள். அரசியல் மேடைகளிலும் தமிழ் பரப்பிய இராய. சொக்கலிங்கனார் அவர்கள் தமிழன்னையின் தவமைந்தர் என்பதில் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம். அவர் வாக்கின்படி நாம் வாழ்ந்தால் நமக்கும் நன்மை. நாட்டுக்கும் நன்மை.

- வளரும்

விநோத சிற்பம்...

தலை வேறு...! உடல் வேறு...!



புரியவில்லையா...? வாருங்கள் 40-ம் பக்கத்திற்கு...

- - - வாழ்க்கைக்குறிப்பு - - -



பெயர்	:	தென்கச்சி கோ. சுவாமிநாதன்
ஊர்	:	தென்கச்சி (பெரம்பலூர் மாவட்டம்)
பிறந்தது	:	27-6-1942
பெற்றோர்	:	கோவிந்தசாமி-அன்னை கோவிந்தம்மாள்
மனைவி	:	மகாலட்சுமி
மகள்	:	செந்தமிழ்ச்செல்வி
படித்தது	:	பி.எஸ்.ஸி., (வேளாண்மை) கோவை விவசாயக்கல்லூரி (1961-65)
பணிகள்	:	தமிழ்நாடு அரசு வேளாண்மை அலுவலராக மூன்றாண்டுகள் (1965-68) தென்கச்சி ஊராட்சி மன்றத்தலைவராக ஏழாண்டுகள் (1970-77) வானொலியில்... 21 ஆண்டுகள் (1978 முதல்)
தற்போது	:	உதவி நிலைய இயக்குநர் சென்னை வானொலி நிலையம்
இலக்கியம்	:	பதினேழாவது வயதில் (1959) முதல் கவிதை பாவேந்தர் பாரதிதாசனின் 'குயில்' இதழில் வெளி வந்தது. தொடர்ந்து எழுதிய இதழ்கள் ஜனசக்தி, தாமரை, தென்மொழி, தமிழ்நாடு, பாக்யா... தற்போது ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம், மஞ்சரி, கல்கண்டு, தினமணி...
இன்று ஒரு தகவல்	:	இந்த வானொலி நிகழ்ச்சி 1988 ஜூலை முதல் தேதி தொடங்கி 11 ஆண்டுகளாக நாள்தோறும் ஒலிபரப்பாகி வருகிறது.
நூல்கள்	:	இன்று ஒரு தகவல் - 20 பாகங்கள். (கலைவாணி புத்தகாலயம்) வாரம் ஒரு தகவல் (வானதி பதிப்பகம்) தென்கச்சியின் நீதிக்கதைகள் - 2 பாகங்கள் (வானதி பதிப்பகம்) அனுபவங்கள் அர்த்தமுள்ளவை (அன்னை புத்தகாலயம்)

வெற்றியின் இரகசியம்!

- - - - - தென்கச்சி கோ. சுவாமிநாதன் - - - - -

சிலருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சிலருக்குத் தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும். இதில் உள்ள ரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் நீங்கள் இந்தக் கதையைக் கேட்கவேண்டும்.

ஜப்பானில் ஒரு பெரிய வீரர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா. அவரிடம் இருந்த படைவீரர்கள் கொஞ்சம்பேர்தான். சிறிய படை பலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் முறியடித்து இருக்கிறார் அவர். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர்.

ஒருதடவை அவர் தனது எதிரிகள் மீது படையெடுத்துக் கொண்டு போனார். அப்போது அவருடைய படை வீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்து விட்டது.

அதாவது...

இந்தப்போரில் நம்மால் வெற்றி பெறமுடியுமா? என்பது அவர்களின் சந்தேகம்.

ஆனாலும் இதை எபபடி தலைவரிடம் கேட்பது? அவர்கள் தயங்கினார்கள்.

நீண்டநேரம் யோசித்தார்கள். அதன்பிறகு கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு தலைவரை நெருங்கினார்கள்... கேட்டார்கள்...

தலைவர் பொறுமையாக இவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டார். பிறகு சொன்னார்...

"சரி... அதை நாம் முடிவு செய்யவேண்டாம். அதோ... அந்த புத்த விகாரத்துக்குப் போவோம். அங்கே போய் பூவா தலையா போட்டுப் பார்ப்போம். அதன்படி செயல்படுவோம். ஏனென்றால் போருக்குப் போகும்போது முழுமனதோடு போகவேண்டும். ஊசலாட்டம் இருக்கக் கூடாது...! என்ன சொல்கிறீர்கள்?"

தளபதியும் படைவீரர்களும் "சரி!" என்று ஒத்துக்கொண்டார்கள்.

உடனே எல்லோரும் அங்கே அருகேயிருந்த புத்தர் கோயிலுக்குப் போனார்கள்.

தலைவர் உள்ளே போனார்...

மற்றவர்கள் எல்லாரும் ஆவலோடு வெளியே காத்துக் கொண்டிருந்தார்கள்.

ரொம்ப நேரத்திற்குப் பிறகு அவர் வெளியே வந்தார். தளபதி - துணைத்தளபதிகள் எல்லாரையும் அருகில் அழைத்தார்

அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக்காசை எடுத்தார்.

"இதோ பாருங்க... இப்ப பூவா தலையா போட்டுப் பார்க்கலாம்... பூ வந்தால் தோற்றுப் போவோம்... தலை வந்தால் வெற்றி பெறுவோம்... பூ விழுந்தால் போர் வேண்டாம். அதைத் தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம். விதி இப்பொழுது நம்ம கையில்தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன்படி நடப்போம்!" என்று சொல்லி விட்டு, தங்கக் காசை சுண்டினார்.

அது சுழன்று மேலே போயிற்று... கணீர் என்று தரையிலே வந்து விழுந்தது.

எல்லோரும் ஆவலோடு அதைக் குனிந்து பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது!

ஒரே மகிழ்ச்சி. ஆரவாரம்.

அதன்பிறகு அவர்களுக்குச் சந்தேகம் வரவில்லை. உறுதியான முடிவோடு போருக்குப் போனார்கள். வெற்றி வாகை சூடினார்கள். திரும்பி வந்தார்கள்.

வெற்றிவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தளபதி பேசினார். "வீரர்களே! இந்த வெற்றியைக் காசுதான் தீர்மானம் செய்து இருக்கிறது... எனவே விதியை வெல்ல யாரால் முடியும்?" பேசிவிட்டு அமர்ந்தார்.

பக்கத்திலிருந்த தலைவர் தன்னிடமிருந்த அந்தத் தங்கக்காசை எடுத்து ரகசியமாக தளபதியிடம் கொடுத்தார்.

தளபதி அதை வாங்கிப் பார்த்தார். அப்படியும் இப்படியும் புரட்டினார்.

அவருக்கு ஆச்சரியம்!

அந்த நாணயத்தின் இரண்டு பக்கத்திலும் இருந்தது தலை தான்!

இதிலேயிருந்து என்ன தெரிகிறது?

வெற்றியின் ரகசியம் என்ன?

மனஉறுதி தான்.

எதைச் செய்தாலும் மனக்குழப்பம் இருக்கக்கூடாது.

"எண்ணித் துணிக கருமம்!" - இது வள்ளுவர் வாக்கு.

இதைப் புரிந்து கொண்டு நாம் செயல்படுவோம்.

பரீட்சை ரிசல்ட் வருகிற சமயம்.

ஒரு பையன் ஒரு காசைச் சுண்டிப் போட்டு பூவா - தலையா பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன.. பாஸா? பெயிலா? பார்க்கறியா?" என்று கேட்டேன்.

"பரீட்சை ரிசல்டைப் பொறுத்த வரையிலும் எனக்குச் சந்தேகமில்லை சார்..!" என்றான்.

"அப்புறம் எதுக்கு இது?" - என்றேன்.

அவன் சொன்னான் "ரிசல்ட் வந்தபிறகு எங்க அப்பா என்னைத் திட்டறதோட விட்டுடுவாரா... இல்லே அடிப்பாராங்கறதைத் தெரிஞ்சிக்கறதுக்காக இது!"

- சொல்வேன்



மணமகன் தேவை

இளையாத்தங்குடி கோயில், ஒக்கூர் பிரிவைச் சேர்ந்த 25 வயதான, விவாகரத்தான அழகான படித்த வெளிநாட்டில் பணிபுரியும் பெண்ணை மறுமணம் செய்து கொள்ள முற்போக்கான மனப்பாங்கும், மனிதநேயமும் கொண்ட விவாகரத்தான/ மனைவியை இழந்த/திருமணம் ஆகாத - வயது பொருத்தமுள்ள, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. மணமகனின் கோயில், பிரிவு, படிப்பு, வேலை அல்லது தொழில், குடும்பம் பற்றிய மற்ற விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தபால் பெட்டி எண்: 313
நகரத்தார்குரல் 108-109,
நேதாஜி ரோடு, மதுரை - 625 001.
போன்:746206

இருபதே விடை பெறுகிறாய்...!

இருபதாம் நூற்றாண்டே!
நீ விடை பெறுகிறாய்
உன்னை
நிறுத்தி வைக்க
முடியாது
பழகிவிட்டால்
பேயைப் பிரிவது கூடத்
துயரம்தான்
நீ பேயல்ல...
ஆனாலும் உன்னை
தேவதை என்றும்
சொல்லமுடியாது.

இருபதாம் நூற்றாண்டே!
மரபுப்படி
"போய் வருக" என்று
உன்னிடம்
சொல்லமுடியாது

ஏனென்றால்
சென்றகாலம்
திரும்பி வருவதில்லை


மணவிலக்குப் பெற்ற
மனைவியைப் போல்
பிரிகிறாய்

உன்னை எப்படி
மறக்கமுடியும்?

உனக்கும் எனக்கும்
பிறந்த குழந்தைகள்
என்னோடிருக்கும்
அவை உன்னை
நினைவூட்டிக் கொண்டே
இருக்கும்.

- கவிக்கோ அப்துல்ரகுமான்





ராயவரம் ராமசாமி செட்டியார் மகள் ஆர்த்தி சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் நடந்த உலக சதுரங்க (செஸ்) விளையாட்டுப் போட்டியில் உலகக்கோப்பையை வென்றார்.

ஸ்பெயின் நாட்டில் நடந்த 18 வயதுக்குட் பட்டவர்களுக்கான இந்த சதுரங்க ஆட்டத்தில் சுமார் ஐம்பது நாடுகளை சேர்ந்த 64 பெண்கள் போட்டியில் கலந்து கொண்டனர். இந்த சர்வதேசப் போட்டியில் உலகக்கோப்பையை வென்ற ஆர்த்தி நகரத்தாரில் ஆயிரத்தாண்டின் முதல் சாதனைப் பெண்மணி என்று நகரத்தார்குரல் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்

தில்லைகூத்தனை கேளுங்கள்

தில்லைகூத்தன் பதில்கள்

(வீர. நாராயணன், திருப்பூர்)

புதிய ஆயிரத்தாண்டில் தங்களின் செய்தி என்ன...? ★

பழைய அந்த ஆயிரத்தாண்டில் என்னென்ன நிகழ்வுகள் என்ற அதன் சுவடுகளைப் பார்க்கிறேன். வெள்ளையருக்கு இந்த தேசம் அடிமையானது. பிறகு ஆயுதமேந்திய இந்திய விடுதலைப் போராட்டவீரர்கள், அகிம்சையில் அண்ணல் காந்தி பெற்ற சுதந்திரம், பாகிஸ்தான், சீனா எத்தனை மோதல்கள், போர்கள், எத்தனை பிரதமர்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள், இந்திய வளர்ச்சிக்கு நீரூற்றிய மகான்கள், ஆன்மீகம் வளர்த்த ஞானிகள், உலக அரங்கில் அறிவியலின் அசுரவளர்ச்சி, வேகம் திகைக்க வைக்கிறது. கிரஹம்பெல், தாமஸ் ஆல்வா எடிசன் இன்னும் எத்தனையோ விஞ்ஞானிகள், செயற்கைக்கோள்கள், உலகத்தை உள்ளங்கையில் கொண்டுவந்த கம்ப்யூட்டர் என சாதனைகளும், வேதனைகளும் கடந்து போனாலும், பண்பாடும், கலாச்சாரமும் இன்னும் காயப்படாமல் இருக்கும் இந்திய தேசம் என்பது மனநிறைவைத் தருகிறது.

நமது நகரத்தாரில் வள்ளல் பாரிஸ்டர் அழகப்பசெட்டியார், ராஜாசர் அண்ணாமலை செட்டியார், தமிழ்க்கடல் ராய.சொ., ஏவி. மெய்யப்பசெட்டியார், கவியரசு கண்ணதாசன் போன்ற இன்னும் பல சாதனையாளர்கள் வாழ்ந்ததும், மறைந்ததும் சென்ற 1999களில் தான். அவர்களின் நினைவுகளையும், சாதனைகளையும் நமது பண்பாட்டுத்தளமாகக் கொள்வோம்.

என்ன... இந்த ஆயிரத்தாண்டு என்னவோ பரபரப்பாக வருகிறது. விமானக்கடத்தல், ஆயுதக்கலாச்சாரம் எனும் தீவிரவாத நெடியோடு வருகிறது. பரபரப்பும், தீவிரவாத நெடியும் நீடித்திருப்பதல்ல... நிச்சயம் மாறும். அன்பே தெய்வம் என்ற வள்ளலாரின் வாக்கினை ஒவ்வொரு உதடுகளும் தன் உள்ளங்களுக்கு சொன்னாலே போதும். ஜாதி, மத, மோதல்களைக் கடந்து மனித நேயத்தோடும், அறிவியல் வளர்ச்சியோடும் இந்த 2000-த்தை அழைத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கை நிறைய இருக்கிறது.

(ராம. சோமசுந்தரம், சென்னை)

சன்மார்க்கம் என்பதன் பொருள் என்ன...?

சன்மார்க்கம் என்பது நல்வழி என்றும், நன்னெறி என்றும் பொருள் கொள்ளலாம்.

சுத்த சன்மார்க்கம் என்பது தூய்மையான நல்லவழி என்றும், சத்திய சன்மார்க்கம் என்பது உண்மையான நல்வழி எனவும் பொருள் உண்டு. இந்த வழிகளிலேதான் இறைவனை எளிதாக அடையமுடியும் என்றார் வள்ளலார்.

(சிங்காரம், காரைக்குடி)

ஏழு பிறப்புகள் என்பது என்ன? மனிதப்பிறவி பற்றி விளக்குங்கள்?

தாவரம், நீந்துவன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் இறைவனின் ஏழு படைப்புகளும், பிறப்புகளும் ஆகும். மனிதப்பிறவி கிடைப்பது அரிதிலும் அரிதாகும். உண்பதும், உறங்குவதும், மக்களைப் பெறுவதும், பேசுவதும், பகுத்தறிவு கொள்வது ஆகியவற்றால் மனிதப்பிறவி ஒன்றும் உயர்வன்று. சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய வழிகளில் இறைவனை உணர்ந்து, வழிபாடு செய்து மோட்சத்தை அடைதற்குரிய இறைஞானம் மனிதருக்கு மட்டுமே உள்ளதால் மனிதப்பிறவி மாட்சிமையுடையதாகும்.

★ **இக்குறியீடு இட்ட கேள்வி ரூ. 25-00 பரிசு பெறுகிறது.**

சிரிப்போம் ...! சிந்திப்பதற்காக ...!

முனைவர். கு. ஞானசம்பந்தன்

7

அனைவருக்கும் 21ஆம் நூற்றாண்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த நூற்றாண்டு மகிழ்வும், புதிய சிந்தனைகளும் கொண்டதாக அமைய, அறிவியல் யுகமாகத் திகழ வாழ்த்துகிறோம்.

பரிணாம வளர்ச்சியில் "அமீபா" என்ற ஓரறிவு உயிரினத்திலிருந்து வளர்ச்சி அடைந்து, மாற்றங்களைச் சந்தித்துக் குரங்குகளின் தொடர் இனமாக மனித இனம் வளர்ச்சியடைந்திருக்கவேண்டும் என்பது "டார்வின்" என்ற அறிஞனின் கருத்து.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாய்க்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரராய் செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து...

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பரிணாம வளர்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

திருமாலின் பத்து அவதாரங்களைக் கூர்ந்து கவனித்தால் இந்த உண்மை புரியும்.

தண்ணீரில் மட்டும் இருக்கும் மீன் - **மச்சஅவதாரம்**

தண்ணீரிலும் தரையிலும் இருக்கும் ஆமை - **கூர்ம அவதாரம்**

தரையில் மட்டும் இருக்கும் பன்றி - **வராக அவதாரம்**

பாதி விலங்கு பாதி மனிதன் - **நரசிம்ம அவதாரம்**

குள்ளமனிதன் - **வாமன அவதாரம்**

காட்டுமனிதன் - **பரசுராமன் அவதாரம்**

இலட்சியமனிதன் - **இராமாவதாரம்**

வேளாண்மைக்குரியமனிதன் - **பலராமன் (கலப்பை)**

உயரியமனிதன் - **கிருஷ்ணாவதாரம்**

இனி வரவேண்டிய சூப்பர்மேன் - **கல்கி அவதாரம்**

அறிவியலோடு பொருந்திய நம் ஆன்மீக வரலாற்றை நாம் ஆச்சரியத்தோடு பார்க்கிறோம்.

கடவுளோடு ஒரு மனிதன் பேசிக் கொண்டிருந்தானாம்.

"சாமி உங்களால முடியாதது எதுவுமில்லையா?"

"ஆமாம்" என்றார் கடவுள்.

"உங்களுக்கு ஒரு கோடி வருடம் எவ்வளவு நேரம்?" - மனிதன் கேட்டான்.

"ஒரு நிமிடம் மாதிரி" - கடவுள்.

"அப்ப ஒருகோடி ரூபாய் என்பது எவ்வளவு ரூபாய்?" - மனிதன் கேட்டான்.

"ஒரு ரூபாய் மாதிரி" - கடவுள் சொன்னார்.

"எனக்கு ஒரு ஒருரூபாய் மட்டும் கொடுங்களேன்" என்றான் மனிதன் விஷயத்தோடு (அதாவது ஒருகோடி ரூபாய் வேண்டுமாம்)

உடனே கடவுளும், "அப்படியானால் மனிதா ஒரே ஒருநிமிடம் பொறு" - என்றாராம். (அதாவது ஒருகோடி வருடம் பொறு என்று பொருள்)

மனிதன் தடாலென்று மயங்கி விழுந்தான்.

சிலர் ஆபத்தான நேரங்களில் கடவுளிடம் ஏதாவது ஒன்றை நேர்ந்து கொள்வார்கள். ஆபத்து நீங்கியதும் கவனமாக மறந்து விடுவார்கள்.

ஒரு மனிதன் பசியோடு வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தான். சாப்பிட ஒன்றுமே கிடைக்கவில்லை. உடனே கடவுளிடம் மனதுக்குள் நேர்ந்து கொள்ளத் தொடங்கினான்.

"கடவுளே குருவாயூரப்பா! நான் போற வழியிலே எனக்கு என்ன கிடைச்சாலும் உனக்குப் பாதி தர்றேன். 10 ரூபாய் கிடைச்சா ஐந்துரூபாய் உனக்கு. 5 ரூபாய் கிடைச்சா இரண்டாரூபா உனக்கு" என்று கணக்குப் போட்டுப் பேசியபடி வந்தான்.

வீதியில் ஒரு ரூபாய் நாணயம் ஒன்று கிடந்தது. மகிழ்ச்சியோடு அதைக் கையில் எடுத்த மனிதன் முதலில் சிரித்தான். பிறகு யோசித்தான். கடவுளிடம் நேர்ந்து கொண்டபடி 50 பைசா கடவுளுக்குக் கொடுக்கவேண்டும். ஆனால் அவனோ, "என்ன கடவுளே குருவாயூரப்பா... உங்க பணத்தை எடுத்துக்கிட்டு, என் பணத்தை மட்டும் போட்டிருக்கீங்களே?" என்றானாம். அதாவது ஏற்கனவே ரெண்டு ரூபாய் அங்கே கிடந்தது போலவும், கடவுள் அதை எடுத்துக்கொண்டு மீதி ஒருரூபாயை அங்கே போட்டது போலவும் பேசினானாம் மனிதன்.

கடவுளுக்கு அடுத்தபடியாக ஞானிகளும், விஞ்ஞானிகளும் கருதப் படுகிறார்கள். 'தாமஸ் ஆல்வா எடிசன்' எனும் விஞ்ஞானியே இந்த ஆயிரம் ஆண்டுகளில் மனித இனத்திற்குப் பெரிதும் பயன்படும் கருவிகளைக் கண்டு பிடித்தவர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

மின்சாரம், திரைப்படம் போன்ற பற்பல புதிய கருவிகளாக 1500க்கும் மேற்பட்ட பயன்படுபொருள்களைக் கண்டறிந்தவர் எடிசன்.

அவர் ஒருமுறை இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது டிக்கெட் பரிசோதகர் வந்து "உங்கள் பயணச் சீட்டைக் காட்டமுடியுமா?" என்றார் பணிவுடன்.

உடனே தாமஸ் ஆல்வா எடிசன் தன் பயணச் சீட்டைத் தேடத் தொடங்கினார். பெட்டியில், சட்டையில், கோட்டில், பணப்பையில் எங்கும் பயணச்சீட்டைக் காணவில்லை. எடிசனுக்குப் பதற்றம் ஏற்பட்டது.

அந்தப் பரிசோதகர், "பரவாயில்லை நீங்கள் பெரிய விஞ்ஞானி. பதறவேண்டாம்" என்றார்.

"இல்லை... இல்லை... சீட்டு வேண்டும். அது மிக அவசியம்" என்றார் எடிசன்.

"பரவாயில்லை" என்றார்கள் உடன் பயணம் செய்தவர்கள். ஆனால் எடிசனோ விடாமல் தேடிக் கொண்டிருந்தார்.

பரிசோதகர், "பரவாயில்லை விடுங்கள்" என்றார்.

அதற்கு எடிசனோ, "அட அதற்கில்லை ஐயா. அந்தச்சீட்டு இருந்தால்தான் நான் எங்கே இறங்கவேண்டும் எனத்தெரியும். இப்போது நான் எங்கே போகிறேன் என்றே எனக்கு மறந்து விட்டது" என்றாராம்.

அறிவியல் மேதைகளுக்கு ஞாபகமறதி இயல்புதான்.

என் நண்பர் ஒருவர் ஞாபகசக்தியை வளர்க்க புதிய மாத்திரைகளைச் சாப்பிட ஆரம்பித்தார். இப்போது அந்த மாத்திரை டப்பா எங்கே வைத்தோம் என்று மறந்து தேடிக் கொண்டிருப்பதாக என்னிடம் சொன்னார்.

மீண்டும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

- இனி சந்திப்போம்

சங்கத்துச் செய்திகள்

புதுவயல்

நகரத்தார் திருமண மண்டபம் திறப்பு விழா 12-12-99 அன்று சிறப்பாக நடைபெற்றது. யெ.மு. சொக்கலிங்கம் செட்டியார் தலைமை ஏற்றார். S.RM.PL. சுப்பிரமணியன் செட்டியார் (தொழிலதிபர், சென்னை) திறந்து வைத்தார். திருச்சி தொழிலதிபர் VKN கண்ணப்பன்,B.E., குத்து விளக்கேற்றி வைத்தார். SP. அழகப்பன் வரவேற்றுப் பேசினார். கவிஞர் பெரி. சிவனடியான், டாக்டர். பழ. முத்தப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். வி. சுவாமிநாதன் நன்றி கூறினார்.

மும்பை

மும்பை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நாசிக் பஞ்சவடியில் உள்ள கார்த்திகேய சுவாமி ஆலயத்தில் 9-11-99 முதல் 14-11-99 வரை கந்தர் சஷ்டி விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த விழாவின் லட்சார்ச்சனையிலும், சஷ்டிவிழாவிலும் நகரத்தார் பெருமக்களும், உள்ளூர் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். பக்தர்கள் கோதாவரி நதியிலிருந்து கொண்டுவந்த புண்ணிய நீரால் அபிஷேக, ஆராதனைகளும் நடைபெற்றது. பக்தர்கள் பால்காவடியும் எடுத்து வந்தனர். சங்கத்தின் முன்னாள் செயலாளர் பரணி. இராமமூர்த்தி சிறப்புரை ஆற்றினார். அன்னதானம் வழங்கி சிறப்புச் செய்ய விழா இனிதே நிறைவுற்றது. மேற்கண்ட தகவலை அமைப்பாளர் நா. மெய்யப்பன் தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம்

நகர விடுதியில் எதிர்வரும் 16-1-2000 அன்று தை கார்த்திகைவிழாவும், அபிஷேக, அன்னதானங்களோடு சிறப்பாக நடைபெற உள்ளது. அரண்மனை சிறுவயல் RM. அண்ணாமலை, கண்டரமாணிக்கம் AN.N. நாச்சியப்ப செட்டியார் சன்ஸ் ஆகியோரால் சிறப்பாக நடைபெற உள்ளது. மேற்கண்ட தகவலை RM. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவை

கோவை நகரத்தார் சங்கம் டிரஸ்டில் கட்டியுள்ள இணைப்புக் கட்டிடத்தின் திறப்புவிழாவும், பாராட்டுவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. கண. சிற்சபேசன் தலைமை தாங்கினார். கல்கண்டு ஆசிரியர் லேனா. தமிழ்வாணன் திறந்து வைத்தார். பழ.கருப்பையா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். கவிஞர் செல்லகணபதி, VM. அழகேசன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

உலக அளவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ராயவரம் ஆர்த்தி ராமசாமிக்கு பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. PL.S.RM. சிவனடியான் செட்டியார், SP. மணியன், A. நடராஜர், வளர்மதி அண்ணாமலை, K.S. சாத்தப்பன், S. அண்ணாமலை ட்ரஸ்ட் நிர்வாகிகள் ஏற்பாடுகளைச் சிறப்புற அமைத்திருந்தனர்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணாபுரம் 4வது குறுக்குத் தெரு, மதுரை - 9 ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108-109, நேதாஜிரோடு, மதுரை - 1 லிருந்து வெளியிடப்பெறுகிறது. **- ஆசிரியர் வி.என். சிதம்பரம்**

திருநகர்

நகரத்தார் சங்கத்தின் சார்பில் பிள்ளையார் நோன்பு நிகழ்ச்சி 14-12-99 அன்று காமாட்சி அரங்கில் நடைபெற்றது. சஅ. அண்ணாமலை வரவேற்றார். தலைவர் பெரி. அழகப்பன். துணைத்தலைவர் ஏ.செல்லப்பன். இராமசாமி ஆகியோர் இழை எடுத்துக் கொடுத்தனர். நிகழ்ச்சியில் 450க்கும் மேற்பட்டோர் இழை எடுத்துக் கொடுத்தனர். இராம. கண்ணப்பன். ஆர்.சொக்கலிங்கம். எஸ்.எல்.மெ. பழனியப்பன். கே. மீனாட்சிசுந்தரம் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர்.

நாகப்பட்டினம்

நகரத்தார் சங்கத்தின் சார்பில் மலையீஸ்வரன் சன்னதியில் உள்ள பழனியப்பசெட்டியார் கட்டிடத்தில் 9ஆவது ஆண்டாக பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. N. அண்ணாமலை செட்டியார். AR. சொக்கலிங்கம் ஆகியோர் 120 பேருக்கு இழை எடுத்துக் கொடுத்தார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் புத்தாண்டு தினசரி காலண்டர் வழங்கப்பெற்றது. மேற்கண்ட தகவலை செயலாளர் நாகப்பன் தெரிவித்தார்.

போட்டோ எடுத்தால்...?

பத்துப் பதினொரு ஆண்டுகளுக்கு முன் ஒரு போட்டோகிராபர் அண்ணா மலையார் கோயிலுக்குள் வந் தார். மூலவரை போட்டோ எடுத்தார். அதன் பிறகு கோபுரத்தின் மீது ஏறி. அங்கி ருந்து சில போட்டோக்கள் எடுத்தார். எடுத்த பிறகு. கோபுரத்தில் இருந்தபடியே கீழேயுள்ள ஒருவரிடம் காமிராவைக் கொடுத்தபோது காமிரா தவறி விழுந்து விட்டது. ரோல் எல்லாம் பாழாகி விட்டது. இருந்தாலும். அவர் ஒரே உறுதியாக மூலவரைப் போட்டோ எடுத்துவிடுவது என்று முடிவு செய்து. மறுபடியும் எப்படியோ ரகசியமாக மூலவரைப் போட் டோ எடுத்துவிட்டார். அந்த ரோல் என்ன ஆயிற்று என்பதெல்லாம் ஒன்றும் தெரியவில்லை. மறுநாள் அவர் இறைவனடி சேர்ந்தார் என்பது மட்டும்தான் தெரிந்தது.

★★ இஞ்சி கால்கிலோ, தனியா 4 மேசைக்கரண்டி, சீரகம் 4 மேசைக்கரண்டி, மிளகு இரண்டு மேசைக்கரண்டி என்ற அளவில் எடுத்து அரைத்து வைத்துக்கொண்டு சாப்பிட்டு வந்தால் வாயுத்தொல்லை குறையும். இந்தப்பவுடரை தேனிலும் கலந்து சாப்பிடலாம். ★★





உலகம் சுற்றிய வாலிபர் அண்ணன் சுப்பையா செட்டியார்

வீ.என். சிதம்பரம்

அறமனச்செம்மல், பெருந்தலைவர் என கோவை நகரத்தாரால் அன்போடும், மரியாதையோடு அழைக்கப்படுவர் அண்ணன் கோனாபட்டு சுப்பையா செட்டியார் அவர்கள்.

எந்த வயதினரோடும் ஒத்துப்போடும் மனப்பண்பாடும், உத்தமக்குணமும் கொண்டவர்.

மிக மிக எளிமையானவர் என்பதோடு அல்லாமல் பெருந்தன்மையும் நிறைந்தவர்.

உலகநாடுகளில் அண்ணனின் கால் படாத நாடுகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அந்நாடுகளை மனைவி மீனாட்சி ஆச்சியோடு சுற்றி வந்த 83 வயது வாலிபர் இவர்.

முதன்முதலில் ரஷ்யாவுக்குச் சென்று வந்த ஒரே நகரத்தார் என்ற பெருமையும் இவர்களைத்தான் சாரும். சென்ற வாரங்களுக்குமுன் நானும், அவரும் ஒரு திருமண வீட்டில் சந்திக்க நேரிட்டது. திருமண வீட்டிலோ அதிகமான கூட்டம். நான் ஒருபுறத்திலும், அவர் ஒருபுறத்திலும் நிற்க எங்களிருவரினிடையே திருமணக் கூட்டம். என்னாலும் கடந்து அவரிடம் செல்லமுடியவில்லை. அவரும் என்னருகே வருவதற்கு முயன்று முடியவில்லை. அப்படியே அவரும் சென்றுவிட்டார். நானும் அப்படியே சென்று விட்டேன்.

அண்ணன் சுப்பையா அவர்கள் கோவை சென்றவுடன் சென்னைக்கு என்னிடம் போனில் தொடர்பு கொண்டு பேசும்போது, "நான் தங்களருகே வந்து பேச நினைத்தேன் முடியவில்லை. வயதும், உடலும் ஒத்து வரவில்லை. கூட்டநெரிசல்வேறு" என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். வேறு எதுவும் பேசவில்லை... "ஏண்ணே! இதற்காகவா பேசினீர்கள்...!" என்று கேட்டேன். "ஆமாம்... உங்களை தூரத்தில் சந்தித்தும் பேசமுடியாமல் வந்து விட்டோமே என்ற ஆதங்கம் என் மனதை அரித்துக்கொண்டே இருந்தது. அதனால் தான் பேசினேன்" என்று அவர் கூறியதில் அவரின் பெருந்தன்மையின் உயரம் கண்டேன். அது அவரின் உயரத்தைவிட நெடியது என்று உணர்ந்தேன்.

கோவையில் அவரின் கங்கா, யமுனா, காவேரி திரையரங்கத் திறப்புவிழாவில் பேசியவர்கள் எல்லாம் சுப்பையா செட்டியார் அவர்களை என்ஜினியர்கள் செலவை இழுத்துவிட்டார்கள் என்று கூறினார்கள். அதற்கு அந்த என்ஜினியர் சொன்னார், "சுப்பையா செட்டியார் அவர்கள் என்னிடம் கூறும்போது வருமானத்திற்காகத் தான் தியேட்டர் கட்டுகிறோம். இதில் செலவையெல்லாம் பார்க்கக்கூடாது" என்று சொன்னதாக என்ஜினியர் சொன்னார்

எந்தவித செலவுமின்றி வருமானம் பார்க்கும் குணம் கொண்டவர்கள். மத்தியில் செலவு எவ்வளவு அதிகம் செலவழிக்கிறமோ, அந்த அளவிற்கு வருமானம் வரும் என்ற கொள்கையில் உள்ள பிடிப்பைக் கண்டு வியந்தேன். அந்த திரையரங்கின் மேல்மாடியிலிருந்து பார்த்தால் மருதமலை முருகன் கோயில் தெரியும்வண்ணம் அமைத்திருக்கின்ற அவரின் கலையுணர்வை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

கோவை நகரத்தார்களின் மத்தியில் அவருக்கென்று ஒரு மரியாதையும், அன்பையும் பொழிந்து வருவதையும் நான் அறிந்திருக்கிறேன்.

கோவை நகரத்தார் சங்க நிர்வாகிகளுக்குப் போட்டியிட நேர்ந்தால்

இவர் தலையிட்டு போட்டியெல்லாம் வேண்டாம் என வேண்டுகோள் வைத்தால் அந்த முடிவை இருசாரரும் பெருந்தலைவர் சொன்னால் சரி என்று கேட்டுக்கொள்ளும் வண்ணம் செயலாற்றும் இயல்பு கொண்டவர்கள் அண்ணன் சுப்பையா செட்டியார் அவர்கள்.

அவரின் அனுபவங்கள், நினைவில் நின்ற சம்பவங்கள் எல்லாம் யதார்த்தமாக அவர் சொன்னவிதம் எல்லாம் நமது நகரத்தார்குரல் வாசகர்கள் பயனுறும் வண்ணம் கூறியிருக்கிறார். இந்த எண்பத்திமூன்று வயது உலகம் சுற்றிய வாலிபரின் பேட்டியை பெருமையோடு வெளியிடுகிறேன்.

சுப்பையா செட்டியார் அவர்களை வாழ்த்திய கவியரசு கண்ணதாசனின் கவிதை





1

திருமுகம் நெடிய தோற்றம்
திருப்பதி திருமால் போல
அருளொடு அன்பின் தேக்கம்
அரசர்கள் கைபோல் நீண்டு
விரலெல்லாம் முழங்கால் மட்டும்
விரிந்து நிற்கின்ற மேன்மை
வரவெலாம் உயர்வாய் வைத்த
மன்னவன் உருவம் ஈது...!

2

சேரமா தேசத்துள்ளே
திருநாவாய்ப் பதியையொட்டி
கேரளா ஓட்டுச்சாலை
கிண்ணெண எழுந்துநின்று
சீருலாம் மேகத்தோடு
தினம்புகை கலக்கவைத்து
ஊரெலாம் சுப்பையாவின்
உயிர்தொழிற் புகழைச் சொல்லும்!

3

நாற்புறம் வயல்கள் ஆங்கே
நடுவிலோர் சிறிய ஏரி
மேற்புறம் கீழ்ப்புறத்தில்
வியத்தகும் சிறுகுன்றங்கள்
பார்ப்பவர் தம்மைஈர்க்கும்
பழநகர் கோனாப்பட்டில்
சேர்ப்பவர் பலபேருண்டு
திருப்பணி மன்னன்செய்வான்



கோவை கங்கா, யமுனா, காவேரி தியேட்டர் அதிபர், அறமனச்செம்மல், பெருந்தலைவர் என்று கோவை நகரத்தாரால் அன்புடன் அழைக்கப்பெறும்

கோனாபட்டு எஸ்.எம்ஆர்.எஸ் சுப்பையா செட்டியார்

அவர்களுடன் ஒரு சந்திப்பு...

சந்திப்பு: சி. நாகேஸ்வரன்

குரல் : அய்யா, வணக்கம். நகரத்தார்குரல் வாசகர்களின் சார்பிலும், ஆசிரியர் மீனாட்சிமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்களின் சார்பிலும் வணக்கங்கள்... தாங்கள் எங்கள் இதழுக்கு பேட்டி தர சம்மதம் தெரிவித்தமைக்கு நன்றிகள்...

அவர் : நன்றி... வணக்கம்... நகரத்தார்குரலின் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். உங்கள் ஆசிரியர் மீனாட்சிமைந்தர் வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஒரு புதுமை விரும்பி என்பது இதழைப் பார்த்தாலே எல்லோரும் அறிவர்.

குரல் : தங்கள் சொந்த ஊர், கோயில் பற்றிச் சொல்லுங்கள்...?

அவர் : எங்கள் சொந்த ஊர் கோனாபட்டு பிள்ளையார்பட்டி கோயில். நான் பிறந்தது 1917. இப்போது எனக்கு 83 வயதாகிறது.

குரல் : பெற்றோர், உடன்பிறந்தோர் பற்றி... ?

அவர் : தந்தையார் கோனாபட்டு சண்முகம் செட்டியார். தாயார் சிட்டாள்ஆச்சி இவர்களுக்கு நாங்கள் மூன்று பிள்ளைகள். அண்ணன் முருகப்பசெட்டியார். சகோதரி மீனாட்சி ஆச்சி (தங்கை) கானாடுகாத்தானில் மணமுடித்துக் கொடுத்தோம்..

குரல் : மனைவி, மக்கள் பற்றி... ?

அவர் : என் மனைவி மீனாட்சி ஆச்சி. கானாடுகாத்தான் அ.அரு. அருணாசலம் செட்டியார். திருமதி. வள்ளியம்மை ஆச்சி தம்பதியரின் மூன்றாவது மகள் 1940-ல் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது மகன்கள் இருவர். பழனியப்பன். சண்முகம் கோவை கங்கா. யமுனா. காவேரி தியேட்டரையும். கேரளாவில் உள்ள ஓட்டு தொழிற்சாலைகளையும் எனக்கு உதவியாக இருந்து நிர்வகித்து வருகிறார்கள். மகள்கள் வசந்தா. வள்ளியம்மை. சீதா. இந்திரா உள்ளிட்ட நான்குபேர். வசந்தாவின் கணவர் நாராயணன் கோவையில் தொழில் செய்து வருகிறார். வள்ளியம்மையின் கணவர் அண்ணாமலை சென்னையில் தொழில் செய்து வருகிறார். சீதாவின் கணவர் முருகப்பனும். இந்திரவின் கணவர் அழகப்பனும் கோவையிலேயே தொழிலாற்றி வருகிறார்கள்

குரல் : தாங்கள் இளமையில் எங்கு கல்வி கற்றீர்கள்? இளமைக்காலங்கள் எப்படி?

அவர் : கோனாபட்டு திண்ணைப்பள்ளியில் நான் கல்வி கற்றேன். அக்காலத்தில் எனக்கு கல்வி கற்றுத்தந்த வாத்தியார் பெயர்கூட சின்னையா வாத்தியார் என்பது இன்னும்கூட என் நினைவில் பசுமையாக உள்ளது. அவர்தான் எனக்கு ஏட்டுப்படிப்பு கற்றுத்தந்த ஆசான். அப்போது என் வயது பதினொன்று இருக்கும்.

குரல் : திண்ணைப்பள்ளி பற்றி கூறுங்களேன்...?

அவர் : திண்ணைப்பள்ளி என்பது அந்தக் கிராமத்தின் பொதுவாக உள்ள ஓர் இடத்திலோ அல்லது ஆசிரியரின் இல்லத்திலோ அல்லது பெரிய தனவந்தரின் இல்லங்களிலோ வைத்து நடக்கும்.

மாணவர்களே மணல் அள்ளிக்கொண்டு வந்து பரப்பி அதில் வாத்தியார் எழுதிய எழுத்தின்மீது எழுதிப் பழகவேண்டும். அதுதான் எங்களுக்கு பிளாக்போர்டு, சிலேட்டு எல்லாமே... அது ஆரம்பக்கல்வி. அதற்குப்பிறகு எழுத்தாணி கொண்டு ஓலைச்சுவடியில் எழுதவேண்டும். ஓலைகளைத் தேடிச்சென்று ஏடு போல அமைத்து மேல்புறமும், கீழ்புறமும் மரத்தால் செய்யப்பெற்ற சிறுபலகை போன்று அடுக்கி நார் வைத்துக் கட்டிக்கொள்வோம்.

வாத்தியார் சொல்லச்சொல்ல நாங்கள் எழுதுவோம். வீசம், கால்வீசம், மானி, அரைக்கால், கால், அரை... போன்ற கணக்குகளும் அங்கே சொல்லித் தருவார்கள். ஏட்டுப்படிப்போடு என் கல்வி நிறைவுற்றது. இன்று கம்ப்யூட்டர் வரை கல்வி வளர்ச்சி பெற்றிருப்பது எனக்கு மிகவும் பிரமிப்பாக இருக்கிறது. ஆனால் அன்று ஏட்டுப்பள்ளிக்கூடத்தில் படித்தாலும் இன்று வரை கால்குலேட்டர், கம்ப்யூட்டர் இல்லாமல் கம்ப்யூட்டர் போல கணக்கு போடுவோம். என் பேரன்கூட கம்ப்யூட்டர் பற்றித் தெரிந்திருக்கிறான் என்றால் கல்வியும், சமூகமும் நல்ல வளர்ச்சி பெற்றிருப்பதில் அறிவியலின் பங்கு மகத்தானது. கல்வி முடிந்தவுடன் கேரளாவில் ஒலவக்கோட்டில் உள்ள எங்களின் ஓடு தயாரிக்கும் கம்பெனியில் ஈடுபடலானேன். பதினான்கு வயதிலேயே தொழிலில் இறங்கி விட்டேன்.

குரல் : தங்கள் தந்தையார் தொடங்கிய தொழில்கள் பற்றி...?

அவர் : என் தந்தையார் சண்முகம் செட்டியார் பர்மாவில் 'சவுட்டகா' என்ற ஊரில் வட்டிக்கடை நடத்தி வந்தபோது, 1915லேயே குன்னூரிலும் ஒரு வட்டிக்கடை வைத்து நடத்தி வந்தார்கள். கோனாபட்டிலிருந்து கொண்டே பர்மா, குன்னூர் கடைகளைக் கவனித்து வந்தார்கள்.

குரல் : வட்டித்தொழிலிலிருந்து ஓடு தயாரிப்பு தொழிலில் எப்படி நுழைந்தார்கள்...?

அவர் : 1917-ல் நான் பிறந்த வருடம் கேரளாவில் ஓடு தயாரிக்கும் கம்பெனி தொடங்கும் எண்ணம் என் தந்தையாருக்குத் தோன்றியது. வட்டித்தொழிலிருந்து ஒரு புதிய தொழிலுக்கு மாறவேண்டும் என்ற சிந்தனையும் என் தந்தையாருக்கு இருந்ததால் ஓட்டு கம்பெனியை தொடங்கினார்கள். இடவாடகை மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய். ஆண் தொழிலாளிக்கு தினக்கூலி ஒண்ணரை அணா, பெண்களுக்கு கூலி ஒரு அணாவாகவும் இருந்தது.

குரல் : நீங்கள் தொழிலில் பதினான்கு வயதிலேயே எப்படி நுழைந்தீர்கள். அதைப்பற்றி...?

அவர் : 1935-ல் என் தந்தையார் இறைவடி சேர்ந்த பிறகு என் அண்ணன் முருகப்பசெட்டியார் பர்மாவிலிருந்து ஒலவக்கோட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். நான், தாயார் அண்ணன் தங்கை எல்லோரும் ஒலவக்கோட்டில் இருந்தபோது 1938-ல் என் தங்கையின் திருமணத்தை நடத்தி முடித்தோம். பிறகு 1940-ல் எனது திருமணம் நடந்தது. அப்பொழுதும் நான் மனைவியுடனும், தாயார், அண்ணன் குடும்பம் எல்லோருமே ஒன்றாக இருந்து ஒலவக்கோட்டு ஓட்டுக்கம்பெனியை நடத்தி வந்தோம். அதன்பிறகு என் அண்ணன் புதுக்காடு மற்றும் சித்தூரில் ஓட்டுக் கம்பெனியைத்தொடங்கி நடத்தினார்கள். நான் ஒலவக்கோடு, கருவனூர், கொடக்கல் போன்ற ஊர்களில் ஓட்டுக் கம்பெனியைத் தொடங்கி நடத்தி வந்தேன்.

குரல் : உங்கள் மனைவியும் கம்பெனிகளை நிர்வகிப்பதில் உங்களுக்கு உதவுவார்களா?

அவர் : எல்லா கம்பெனிகளுக்கும் நாங்கள் இரண்டுபேரும் தான் போய்வருவோம். நான் வெளியூர் சென்றுவிட்டால் அவர்தான் எல்லாவற்றையும் கவனித்து வந்தார். இரவு நேரத்தில்கூட சூளைக்குச் சென்று வேலைகளைக் கவனித்து வருவார்கள். தொழிலாளர் நலனிலும் மிகுந்த நாட்டம் கொண்டவர். தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தபோதும் அழைத்து சமரசம் பேசும் திறன் கொண்டவராய் என் மனைவி இருந்தார். கேரளமாநில உள்ளாட்சித்துறை அமைச்சர் சி.எம். சுந்தரம் அவர்கள் என் மனைவியைப் பற்றிக் கூறும்போது, "உங்கள் மனைவி, தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவர். மிகுந்த இரக்ககுணம் உடையவர். நிர்வாகத்திறன் படைத்தவர்" என குறிப்பிடுவார். தொழிற்சங்கத்தலைவரும், கேரள மாநில முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஏ.என். யூசுப் அவர்கள்கூட ஒருமுறை என்னிடம் என் மனைவியின் பணிகளைப் பாராட்டி, "தொழிற்சாலையின் ஒவ்வொரு பொருளும் ஆச்சியின் புகழைக் கூறிக்கொண்டே இருக்கும்" என்று கூறுவார்கள்.

குரல் : கோவைக்கு எப்போது வந்தீர்கள்? தியேட்டர் கட்டும் ஆர்வம் எப்படி வந்தது...?

அவர் : நாங்கள் 1959-ல் கோவைக்கு வந்து காந்திபுரத்தில் இடம் வாங்கி வீடு கட்டினோம். கேரளாவில் ஓட்டு கம்பெனியில் அடிக்கடி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், பிரச்சனைகள் ஏற்படும்போது கோவை இல்லத்திற்கு வந்துதான் தங்குவோம். கேரளாவில் ஓட்டுக்கம்பெனிகளை நடத்துவதோடு வேறு தொழிலும் செய்யவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தது. உலகப்போருக்குப்பின் எங்கள் ஒலவக்கோட்டு கம்பெனிக்கு அருகிலேயே இரும்பு ஆணி தயாரிக்கும் தொழிலையும் நடத்தி வந்தேன்.

அப்போது பாலக்காட்டில் தியேட்டர் கட்டலாமென்று எண்ணினேன். கேரளாவில் இருந்த அழகான தியேட்டர்களைப் போல் தமிழ்நாட்டில் அப்போது நல்ல தியேட்டர்கள் இல்லை. தமிழ்நாட்டில் தியேட்டர் கட்ட

முடிவு செய்து கோவையில் 1979-ல் ஒரு ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கினோம். ஒரு நல்ல தியேட்டராக அது அமையவேண்டும் என்று விரும்பி, மிகக் கடின உழைப்பால் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்து 1984-ல் கட்டி முடிக்கப்பெற்று, கற்பகம் காம்ப்ளக்ஸ் என்று பெயரிட்டு அதில் கங்கா, யமுனா, காவேரி என்ற மூன்று திரையரங்குகள் திறக்கப்பெற்று நல்லமுறையில் நடந்து வருகின்றது.

குரல் : **கங்கா, யமுனா, காவேரி என்ற பெயர்களை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்...?**

அவர் : கங்கா, யமுனை, காவேரி நதிகள் வற்றாத ஜீவநதிகள் அல்லவா..? அந்தப் பெயரில் தொடங்கும் திரையரங்கத்தொழில் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான்...

குரல் : **தாங்கள் எப்போதும் கதராடைதான் அணிவீர்களா...?**

அவர் : 1935-ல் கேரளாவுக்கு மகாத்மா காந்திஜி வருவதாக அறிந்தோம். அப்போது நான் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால் ஒலவக்கோடு ரயில்வே ஸ்டேஷனில் காந்திஜியை வரவேற்பதற்காக நண்பர்களுடன் நின்று கொண்டிருந்தோம். ரயிலை வழியில் நிறுத்தி காந்திஜி அவர்களை இறங்க வைத்து ஒலவக்கோடு அருகே உள்ள சபரி ஆஸ்ரமத்திற்கு அவரை அழைத்துச் சென்றோம். அப்போது அவருடன் உரையாடி மகிழ்ந்த அந்த நாளிலிருந்து கதராடை அணியத் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை கதராடைதான் உடுத்துகிறேன். ஒரு சிறப்பான செய்தி என்னவென்றால் சபரி ஆசிரமம் உள்ள "அகத்திய திரை" என்ற அந்த கிராமத்தில் ஆண்களும், பெண்களும் அன்று முதல் இன்றுவரை கதராடையைதான் உடுத்துகிறார்கள் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

குரல் : **காங்கிரஸ் இயக்கத்தில் உங்கள் ஈடுபாடு எப்படி...? அந்தக்காலத்தில் நண்பர்கள் யார்...?**

அவர் : நான் சுதந்திரப்போராட்டங்களில் ஈடுபடவில்லையென்றாலும், காங்கிரஸ் அனுதாபியாகவும் இருந்தேன். கேரளா மாநிலத்தில் விடுதலைப் போராட்ட வீரர்களில் என் நண்பர்களும் இருக்கிறார்கள்.

1942-ல் தேர்தல் நடந்தபோது கிராமங்களுக்கு வாக்கு சேகரிக்கச் செல்வோம். எப்படித் தெரியுமா...? கேரளா என்பதே மலையாளபூமி. மேடும் பள்ளமும் நிறைந்த நிலம் என்று பொருள். நாங்கள் யானையின் மீது ஏறி வாக்குக் கேட்கச் செல்வோம். என் அரசியல் ஆர்வம் எல்லாம் கேரளாவில்தான். நண்பர்கள் என்றால் இன்றைய காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவராகத் திகழும் முன்னாள் முதல்மந்திரி கருணாகரன், பனமுள்ளி கோவிந்தமேனன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), சுன்னாசாகிப் (முன்னாள் எம்.பி.) பாலக்காடு ராகவமேனன் போன்றவர்கள். நாங்கள் ராகமேனனுக்காக மிகவும் பாடுபட்டு அவரை வெற்றி பெறச் செய்தோம். அவர் அப்போதைய பிரகாசம் மந்திரிசபையில் போக்குவரத்து மற்றும் உணவு மந்திரியாக இருந்தார். இவர் எனது நெருங்கிய நண்பராவார்.

குரல் : **தாங்கள் புரிந்த தொழிலில் சாதனையாக எதைக் கருதுகிறீர்கள்...?**

அவர் : 1986-ல் பேஸல்மிஷன் என்ற ஜெர்மன் கம்பெனி 8 ஓட்டுத் தொழிற்சாலையை நடத்தி வந்தார்கள். 1917-ல் நடந்த இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனியரின் "எம்டன்" என்னும் நீர்மூழ்கிக் கப்பல் கேரளாவிற்கு வந்தது. அப்போது இந்தத் கொடக்கல் கம்பெனியிலிருந்து சுரங்கப்பாதை அமைத்து அதன் வழியாக உணவுப்பொருட்களை அனுப்பி ஆற்றில் நிற்கும் சிறிய கப்பல் வழியாகத் தொலைவில் கடலில் உள்ள அந்த எம்டன் என்ற நீர்மூழ்கிக் கப்பலுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதைக் கண்ட வெள்ளையர்கள் ஜெர்மனியர்களை கைது செய்து அந்தக் கம்பெனியையும் கைப்பற்றி காமன்வெல்த் டிரஸ்ட் லிமிடெட் என்று பெயரிட்டு வெள்ளையர்கள் நடத்தி வந்தார்கள். தொழிலாளர்கள் கூலித்தகராறில் 8 கம்பெனிகளில் ஒன்றான கொடக்கல் ஓட்டுக்கம்பெனி 3 வருடம் மூடிக் கிடந்தது. 124 ஏக்கர் பரப்பளவுள்ள கம்பெனி, குவாட்டர்ஸ், பங்களா அடங்கிய தொழிற்சாலையாக இருந்த அதை 1954-ல் வெள்ளையர்களிடமிருந்து வாங்கி நான் நடத்த ஆரம்பித்தேன்.

அப்போது போதுமான சாலைவசதி, மின்சாரவசதி எதுவுமில்லை. ஜெர்மானிய தானியங்கி எந்திரங்களால் நிர்மாணிக்கப்பெற்றிருந்தது. அந்தச் சிரமங்களிலும் அந்தக் கம்பெனியை எடுத்து நிர்வகித்ததும் ஒரு சாதனைதான். அந்த கொடக்கல் என்ற இடத்தில் கம்பெனிக்கு அருகில் உள்ள சுமார் 10 ஏக்கர் நிலத்தை அந்த ஊர் முன்னேற்றம் கருதி ஜவஹர்லால் நினைவு மருத்துவமனை கட்டுவதற்காக ஒரு பொது நிறுவனத்திற்கு இலவசமாகக் கொடுத்தோம். இன்று அந்த இடத்தின் மதிப்பு கோடிக்கணக்கில் இருக்கும்...

குரல் : **1917—லேயே கேரளா சென்று விட்டீர்கள். அப்போது அங்கு தமிழர்கள் தமிழ் மொழியின் நிலை எப்படி இருந்தது...?**

அவர் : கேரளாவில், அப்போது பள்ளிகளில் தமிழ் இல்லை. வார, மாத பத்திரிகைகள்கூட அங்கு கிடைக்காத ஒரு நிலை. தமிழர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போதுதான் தமிழ் என்ற உணர்வே வரும்.

அப்படி ஒரு காலக்கட்டத்தில் நானும் சங்கரன்பிள்ளை என்ற நண்பரும் கேரள அரசினை சந்தித்து முனிசிபல் பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு வரப் பாடுபட்டு வெற்றியும் கண்டோம்.

ஆனந்தவிகடன் அப்போது 2 அணா, தினமணி ஒரு அணா. மெட்ராஸ் மெயில் எனும் பத்திரிகை ஓர் அணா. காந்தி, சங்கு போன்ற இதழ்கள் காலணா என்ற விலையில் இருந்தது. இந்தப் பத்திரிகைகளை எல்லாம் சென்னையிலிருந்து வருத்தி ஆட்களை வைத்து எல்லா கடைகளுக்கும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தோம்.

"காந்தி" பத்திரிகைக்கு டி.எஸ். சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்தார். சுப்பிரமணியம் என்பவர் "சங்கு" பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். அதனாலேயே அவர் சங்கு சுப்பிரமணியம் என்றழைக்கப்பட்டார். அந்தக் காலத்தில் காந்தி, சங்கு பத்திரிகைகளை புதுமையாக விற்பனை செய்தோம். சாலையில் நின்று கொண்டு பத்திரிகைகளை பரப்பி வைத்து விட்டு சங்கு ஊதுவோம். தமிழர்கள் எல்லாம் வந்து காலணா பணத்தை வைத்துவிட்டு

பத்திரிகைகளை எடுத்துச் செல்வார்கள். இப்படி தமிழ் மொழியினை கேரளா மாநிலத்தில் பரப்புவதற்கு சங்கரன்பிள்ளை மற்றும் நண்பர்களோடு பாடுபட்டிருக்கிறேன்.

குரல் : **வெளிநாடுகள் எல்லாம் சென்றிருக்கிறீர்கள், அதைப்பற்றி...?**

அவர் : அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், ஜெர்மனி, லண்டன், பாரீஸ், இத்தாலி, ரோம், சுவிட்சர்லாந்து உட்பட பெரும்பாலான நாடுகளுக்குச் சென்று மனைவியுடன் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தேன். ஆனால் எனக்குப்பிடித்த ஊர் லண்டன்தான். ரொம்ப அமைதியான நகரம். அமெரிக்காவில் 5-00 மணிக்கு மேல் வெளியே செல்லமுடியாது.

அந்த நாடுகளோடு நமது நாட்டை ஒப்பிட முடியாது. அந்த நாடுகளெல்லாம் வேகமாக முன்னேறிய நாடுகள். நமது நாடு இப்போதுதான் முன்னேறி வருகிறது.

அமெரிக்காவில் 'போர்டு' கார் கம்பெனியை பார்த்தேன். நாள் ஒன்றுக்கு 1,100 கார்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் அவர்களின் உழைப்பும், நவீன யுக்திகளை கையாளும் விதமும் பாராட்டக்கூடியதாய் உள்ளது. போர்டு கம்பெனி 9 இடத்தில் கார்கள் உற்பத்தி செய்கிறது.

குரல் : **நமது சமூகத்தில் "மணமுறிவு" என்ற மேற்கத்திய கலாச்சாரம் புகுவது பற்றி...?**

அவர் : நகரத்தார் சமூகத்தில் இந்த மணமுறிவு (விவாகரத்து) இப்பொழுது அதிகமாக பரவி வருவது வருத்தத்திற்கு உரியது. கண்ணியம் நிறைந்தவர்கள் நகரத்தார்கள் என்ற நற்பெயரும் பாராட்டும் மற்ற சமூகத்தினரிடமிருந்து நம்மை உயர்த்தியிருக்கிற நிலையில் இந்த மேற்கத்திய கலாச்சாரம் களையப்படவேண்டும். இளைஞர்களும், இளைஞிகளும் இந்த பிற்போக்குத்தனமான வழக்கத்திலிருந்து இந்த இரண்டாயிரத்து ஆண்டிலாவது மாற்றிட முயற்சிக்கவேண்டும்.

குரல் : **நகரத்தார் இளைஞர்களுக்கு தாங்கள் ஏதேனும் கூறுங்களேன்...?**

அவர் : நகரத்தார் வேலைக்குச் செல்வதைவிட தொழில் முனைவதில் ஆர்வம் கொள்ளவேண்டும். வேலைக்குச் சென்று சம்பளம் வாங்குவது குடும்பச்செலவுகளுக்கும்கூட போதாதநிலையில், மகளுக்குத் திருமணம் எப்படி செய்ய இயலும். பணிக்குச் செல்வதைவிட தொழில் முனைந்தால் எதையும் சாதிக்க இயலும் என்ற நம்பிக்கை வளரவேண்டும். சீதனம் மற்றும் முறை கேட்கும் வழக்கத்தையும் கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதும் என்னுடைய கருத்து...

குரல் : **நகரத்தார்களுக்காக நீங்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றி...?**

அவர் : நான் கோவை நகரத்தார் சங்கத் தலைவராக இருந்தபோது சங்கக்கட்டடத்தை விரிவாக்கம் செய்ய என் தலைமையில் ஒரு குழு அமைத்து அவரவர் சொந்தச் செலவில் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டிவந்தோம். கட்டடத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டபோதும் என் சொந்தப்பணத்தை மேற்கொண்டு கொடுத்து நகரத்தார் சங்கக்கட்டடம் கட்டுவதற்கு உதவியிருக்கிறேன்.

கோனாபட்டில் 1000 மாணவர்களுக்கு மேல் படிக்கும் ஸ்ரீ சரஸ்வதி உயர்நிலைப்பள்ளியை நான் எடுத்து தலைவராக இருந்து சிறப்பாக நடத்தி வருகிறேன்.

கோவையில் நகரத்தார் பிருந்தாவன் வித்யாலயா பள்ளிக்கட்டடம் கட்டுவதற்கும் உதவியிருக்கிறேன். கோவை நகரத்தார் சங்கம். இளைஞர் சங்கம் வளர்ச்சிக்கும் உதவிக் கொண்டிருக்கிறேன். என் மனைவி மீனாட்சிஆச்சி பெயரில் ஒரு ட்ரஸ்ட் உருவாக்கி திருமண உதவி வழங்கி வருகிறேன். ஆண்டுதோறும் ஏழைக்குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதையும் வழக்கமாக கொண்டிருக்கிறேன்.

குரல் : இதுவரை நீங்கள் வகித்த பொதுநலப் பொறுப்புகள்...?

அவர் : கோவை நகரத்தார் சங்கத்தலைவராக இருந்திருக்கிறேன். நகரத்தார் பிருந்தாவன் வித்யாலயா பள்ளியின் தலைவராக உள்ளேன். 1954-ல் முதல் ரோட்டரி சங்க உறுப்பினராக இருந்து வருகிறேன். கோனாபட்டு நகரத்தார் டிரஸ்ட் தலைவராகவும், ஸ்ரீ சரஸ்வதி மேல்நிலைப்பள்ளியின் தலைவராகவும் இருக்கிறேன். கேரளத் தொழிலாளர் கூலி நிர்ணயக் குழுவில் கேரள மாநில அரசால் நியமிக்கப்பெற்ற ஒரே தமிழனாகவும் பணியாற்றி உள்ளேன்.

இதுபோன்ற இன்னும் பல பதவிகளில் இயன்றவரை மனஉறுதியோடும். நேர்மையோடும் உழைத்தும் இருக்கிறேன். இன்னும் உழைத்துக்கொண்டும் இருக்கிறேன்.

குரல் : கேரளாவில் உள்ள ஆலயங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறீர்களா ?

அவர் : பெரும்பாலும் இந்தியாவில் காசி முதல் கன்னியாகுமரி வரை உள்ள எல்லா ஆலயங்களுக்கும் சென்றிருக்கிறேன். கேரளாவிலும் அனைத்து கோயில்களுக்கும் சென்றுள்ளேன். கேரளாவில் பாலக்காட்டிற்கு அருகில் ஏமூர் பகவதி அம்மன் ஆலயம் உள்ளது. அந்த ஆலயத்தைச் சுற்றி எப்போதும் தண்ணீர் சூழ்ந்து இருக்கும். அந்த ஆலயம் பாலக்காட்டு ராஜா அவர்களின் நிர்வாகத்தில் இருந்தது. அவர் என் நண்பர். அதனால் நான் அடிக்கடி அந்தக் கோயிலுக்குச் செல்வேன். அந்த ஆலயத்தில் உள்ள பகவதி அம்மன் சிலை உடலெல்லாம் நீருக்குள்ளிருக்கும். கரங்கள் மட்டும் நீரின் மேலே தெரியும்.அந்தக் கைகளுக்கு நாங்கள் வெள்ளியில் அங்கி செய்து வைத்தோம். காங்கிரஸில் பிளவு ஏற்பட்டசமயம் சின்னம் தொடர்பான பிரச்சனை ஏற்பட்டபோது முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இக்கோயிலுக்கு வந்தார்கள். அப்போது நீருக்குள் இருந்து கைகள் தெரிவதைப் பார்த்த அவர்கள். அதன்பின்தான் தனது கட்சிக்கு 'கை' சின்னத்தைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறுகிறார்கள்.

குரல் : தங்கள் இலக்கிய நண்பர்கள் யார்...?

அவர் : கவியரசு கண்ணதாசன், வானதி திருநாவுக்கரசு, லேனா தமிழ்வாணன் சா. கணேசன் போன்றவர்கள். திரையுலகில் என்றால் சிவாஜி. கே.ஆர்.ஜி., ஏ.வி.எம். சரவணன், பழ. கருப்பையா போன்றவர்கள்

குரல் : தங்களின் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதேனும்...?



தம்பதியராய் காட்சி தரும் சுப்பையா செட்டியார் - மீனாட்சி ஆச்சி



குடும்பத்தினரோடு சுப்பையா செட்டியார் - மீனாட்சி ஆச்சி



சுப்பையா செட்டியாரின் 81ஆவது பிறந்தநாளில் மலர் மகுடம் அணிவித்து வாழ்த்தும் பிரமுகர்கள் நடிகர் சீனு, அசோக்குமார், இயக்குநர் எஸ்பி. முத்துராமன் தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி., இராமநாராயணன் மற்றும் பிரமுகர்கள்



கோவை கங்கா, யமுனா, காவேரி திரையரங்க தொடக்கவிழாவில் மீனாட்சி ஆச்சி குத்து விளக்கேற்றுகிறார்.



கர்மவீரர் காமராஜரை தனது இல்லத்தில் வரவேற்ற காட்சி




துலாவூர் நிரம்பவழகிய தேசிக சுவாமிகள்,
பாதரக்குடி ரவீந்திரநாத சுவாமிகள் ஆகியோரிடமிருந்து
அறமனச்செம்மல் பட்டம் பெறுகிறார்...



பாரிஸ் நகரில் சுப்பையா செட்டியார் தம்பதியர்
மற்றும் நண்பரோடு...



குன்றக்குடி அடிகளாரிடம் பாராட்டுப் பெறுகிறார்...



நீதியரசர் ஏ.ஆர். லெட்சுமணன் அவர்களோடு...



கோவை பிருந்தாவன் பள்ளிக்கு வருகை தந்த
ஏசி. முத்தையா செட்டியார் அவர்களை தலைவர்
வரவேற்ற காட்சி...



முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கு
வாழ்த்துக் கூறுகிறார்




கோனாபட்டு கொப்புடையம்மன் கோயில் விழாவில்
ஆசிரியர் வி.என்.சிடி.யுடன் சுப்பையா செட்டியார்





கோவை கங்கா, யமுனா, காவேரி திரையரங்க திறப்புவிழாவில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.எம். வீரப்பன், க. ராஜாராம், ஏவிஎம். சரவணன் கேரள மாநில முன்னாள் அமைச்சர் சுந்தரம் ஆகியோரோடு...



கேரள கொடக்கல்லில் உள்ள ஓட்டுக் கம்பெனியின் தோற்றம்



ராஜாசர் முத்தையா செட்டியார், கவியரசர் ஆகியோர் பங்கேற்றவிழாவில் நமது சுப்பையா செட்டியார் உரையாற்றுகிறார்

அவர் : நாங்கள் வெளிநாடு சென்றபோது லாஸ்ஏஞ்சலில் டிஸ்னிலேண்ட் பார்க்க போயிருந்தபோது, எங்களின் நண்பர் எங்களை அவரது இல்லத்திற்கு அழைத்துச் செல்வதற்காக எங்களை ஒரு இடத்தில் நிற்குமாறு கூறியிருந்தார். அதற்காக எங்களுடன் வந்த குழுவை நாங்கள் போகச் சொல்லி விட்டோம். ஆனால் இரவு 10-00 மணி வரை நாங்கள் காத்திருந்தும் எங்களை அந்த நண்பர் வந்து அழைத்துச் செல்லவில்லை. அப்போது ஒரு பாகிஸ்தான் டாக்ஸி டிரைவர் எங்களைப் பார்த்து விபரம் கேட்டார். நாங்கள் விபரம் கூறியதும் 50 மைல் தொலைவில் உள்ள நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு மிகச் சரியாக கொண்டுவந்து சேர்த்து விட்டார். நாங்கள் ஓட்டல் வந்து சேரும்வரை மிகக் கவலையோடும், பயத்தோடும் இருந்தோம். ஓட்டலுக்கு வந்தபோது எங்களின் நண்பரும் எங்களை தேடி அங்கு வந்திருந்தார். அப்போதுதான் தெரிந்தது நாங்கள் காத்திருந்த இடத்தில் நான்கு வழிகள் இருப்பதாகவும், நண்பர் ஒருவழியிலும் நாங்கள் வேறு ஒரு வழியிலும் காத்திருந்தது தெரிய வந்தது. இது ஒரு மறக்கமுடியாத சம்பவம்.

இன்னொன்று... நானும் என் மனைவியும் ஊரில் 80வது ஆண்டு சதாபிஷேக வேலை ஏற்பாடுகளை செய்து விட்டு இரவு 10-00 மணிக்கு கோவை வந்து சேர்ந்தோம். மறுநாள் காலை 10-00 மணிக்கு டி.வி.யில் மஹாபாரதம் பார்த்துக்கொண்டிருந்தபோது திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்ட என் மனைவியை மருத்துவமனையில் சேர்த்தோம். 77 ஆண்டுகளாக மருத்துவமனைக்கே செல்லாத அவர்களை அன்றுதான் மருத்துவமனையில் சேர்த்தோம். சேர்த்த சிறிது நேரத்திலேயே தெய்வமானார்கள். காலம் முழுவதும் கூட இருந்தவர்கள் மறைந்தபோது என் கண்கள் குளமாயின. வாழ்க்கைத் துணைவியின் மறைவு என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒன்றாகிவிட்டது.


குரல் : எங்கள் ஆசிரியருக்கும் தங்களுக்கும் உள்ள நட்பு எப்படி...?

அவர் : நீண்டகாலமாக உங்கள் ஆசிரியர் வி.என்.சிடி. என் நண்பர். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு தக்காராக இருந்தபோது என்னை அடிக்கடி அழைப்பார். நானும் சென்று ஆலய தரிசனமும் முடித்துவிட்டு அவரின் வீட்டில் தங்கியிருப்பேன். ஒருமுறை நான் 'சிகாகோ செல்கிறேன்' என்று அவரிடம் சொன்னபோது, அவர் சொன்னார், 'அங்கே என் மகன் வள்ளியப்பன் இருக்கிறான். அவனைப் போய்ப் பாருங்கள்' என்று கடிதம் எழுதி தந்தார். வள்ளியப்பனுக்கு எழுதிய கடிதத்தில், 'நான் அங்கு வந்தால் எனக்கு எப்படி உபசரிப்பு வரவேற்பு இருக்குமோ, அதேபோல அண்ணன் அவர்களையும் கவனிக்கவேண்டும்' என்று எழுதியிருந்தார்.

கடிதம் கண்ட சித. வள்ளியப்பனும் என்னை நன்றாக கவனித்து சிறப்பாக வழியனுப்பி வைத்ததையும் என்னால் மறக்கமுடியாது. சிகாகோவில் டாக்டர் ஆறுமுகம் (கண்டரமாணிக்கம்) மற்றும் வெளிநாடுகளில் பலர் செய்த உதவிகளையும் மறக்கமுடியாது. நான் பெற்ற நல்ல நண்பர்களில் உங்கள் ஆசிரியர் வி.என்.சிடி.யும் ஒருவர் என்பதையும் பெருமையாக நினைக்கிறேன்.

குரல் : நன்றி அய்யா, தங்களின் அனுபவங்கள் நகரத்தார்குரல் வாசகர்களுக்கு சுவையாகவும், வழிகாட்டுதலாகவும் அமைந்திருந்தது குறித்து மகிழ்ச்சி. விடை பெற்றுக்கொள்கிறோம்.

அவர் : நன்றி. அனைவருக்கும் எனது இனிய புத்தாயிரத்தாண்டு வாழ்த்துக்கள்... நன்றி வணக்கம்...



மேலாளர் மற்றும் சூப்பர்வைசர்கள் தேவை

மதுரையில் இயங்கி வரும் மருந்து மொத்த வணிக நிறுவனத்திற்கு மேலாளர் மற்றும் சூப்பர்வைசர்கள் தேவை. அனுபவமும், தகுதியும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தபால் பெட்டி எண் 312

நகரத்தார்குரல், 108-109, நேதாஜி ரோடு, மதுரை-1. போன்: 746206

WANTED



B.A., B.Sc., B.Com.,

படித்த பட்டதாரிகள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

SREE RAJENDRA MILLS LIMITED

GANDHI NAGAR

LEIGH BAZAAR P.O.

SALEM - 636 009

நலமாய் வாழ நலவேடுகள்

குழந்தையின்மை, பாலியல், மறைமுகப் பிரச்சனைகள், நூல்கள் By மூன்றுமுறை அரசு விருதும் பதக்கமும், சர்வதேச விருதுகளும் காங்கிரஸ், தி.மு.க. எம்.ஜி.ஆர். விருதுகளும், மருத்துவ மாமணி விருதும் பெற்ற



Dr. N.N. கண்ணப்பன்

நலவாழ்வு ஆலோசகர்

நிறுவனர்: செல்வ விநாயகர் கோவில்

புரவலர்: தேசீயப் பார்வையற்றோர் சங்கம்,

செயலாளர்: மதுரை ஜாக்கிங் கிளப்

பாலமுருகன் செக்சாலஜி & பொது ஆஸ்பத்திரி

95, வடக்கு வெளி வீதி, (மாடி)

சிம்மக்கல் பஸ் ஸ்டாப், மதுரை – 625 001

சொன்னதும்... கேட்டதும்

இந்த எம்.பி. பதவியை நாட்டுலேயே மிகப்பெரிய பொறுப்பு வந்துவிட்டதாக நான் நினைக்கத் தயாராக இல்லை. இது சாதாரண விஷயம்தான். நானும் சாதாரண மனிதன்தான்...

- திரு. சோ குமுதம் பத்திரிகையில்

சென்னை மேற்கு மாம்பலம் குப்பையா செட்டி தெருவில் கோவிலூர் கிளை மடமாக மூன்றுமாடிக் கட்டடம் கட்டப்பெற்றுள்ளது. திறப்புவிழாவில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளும், காஞ்சி இளையவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கோவிலூரில் ஏற்பட இருக்கும் சனாதன தர்ம உலகப் பல்கலையின் கிளை அலுவலகமாக செயல்படும்.

- கோவிலூர் ஆதீனச் செய்திமலர்

என் கதைகளுக்கு இவ்வளவு பணம் வேண்டுமென்று நான் பத்திரிகைகளிடம் கேட்டதே இல்லை. பேரம் பேச, அவர்கள் தருவது என் கதைக்கு விலை அல்ல. கேட்டுப் பெற அது கூலியும் அல்ல. உரிமைப்போர் புரிய நான் அவர்களிடம் வேலை செய்பவனுமில்லை. எழுத்தாளர் உரிமைக்காக எழுத்தாளர்களே போரிடல் ஆகியவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் வருமாயின் நான் எழுதுவதை விட்டு விடுவேன்...

- திரு. ஜெயகாந்தன் ஒரு கட்டுரையில் சொன்னது

உலக வரலாற்றிலேயே முதல்முறையாக தாம் பிறந்து வாழ்ந்த பூமியை 'தாய்நாடு' என்று சிறப்பித்துப் பாராட்டி உறவு கொண்டாடிய உலகின் முதல் சமுதாயம் இந்து சமுதாயமே! உலகின் மற்ற நாட்டவர்கள் அனைவரும் தமது நாட்டை 'தந்தையர் நாடு' என்றுதான் அழைத்து வந்தனர். பிறந்த பூமியை தாய்நாடு என்றழைத்த பெருமை இந்தியர்களைத்தான் சேரும்

- இதயம் பேசுகிறது தேச விழிப்புணர்ச்சி தொடரில்

விடுதலைப் போராட்டக் காலத்தில் வெள்ளையர்களால் தடை செய்யப்பட்ட கட்டுரைகள், பத்திரிகை வெளியீடுகள், கவிதைகள் ஆகியவற்றின் கண்காட்சி புதுதில்லியில் நடைபெறுகிறது. தொல்பொருள் வாரத்தையொட்டி இந்திய தொல்பொருள் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சியில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், பஞ்சாபி, உருது, இந்தி, வங்காளம், சிந்தி, மராத்தி, ஒரிசா, குஜராத்தி, அஸ்ஸாமி, ஆங்கிலம் ஆகிய பல்வேறு மொழிகளில் இந்திய விடுதலை உணர்வுகளை தட்டி எழுப்பிய படைப்புகள், எழுதியவர் பற்றி தகவல்கள் அனைத்தும் உள்ளன... - அரசு பத்திரிகை தகவல் துறை, மதுரை

7ஆம் பக்க விடை...





ஒரு தலை யானை... இன்னொரு தலை எருமை...
பிள்ளையார்பட்டி ஆலயத்தில் உள்ள இந்த விநோத சிற்பம் நமது ஆசிரியரின் கண்களுக்குள் "கிளிக்" ஆனது...



மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் மாலை அணிவித்து சிறப்புக்கவிதை வாசிக்கப்பெற்றது சி. வீரபாண்டியதென்னவன் கவிதை வாசித்தார். விழாவில் ஸ்டேட் பாங்க் மேலாளர் ஏ.ஆர். மணி, நற்பணி மன்றத்தலைவர் ஆர். சொக்கலிங்கம், ஜி. அய்யல்ராஜு, லோகு ஆகியோர் உள்ளனர்

மணவாழ்த்து



கீழச்சிவல்பட்டி ஏஎல். சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி சுபாவுக்கும், அரியக்குடி என்.ஆர்எம்.என். நாச்சியப்பசெட்டியார் புதல்வன் மீனாட்சிசுந்தரத்திற்கும் 15-11-99 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் நா. சுப்பிரமணியன் வரவேற்றார். வ.சுப. நாச்சியப்பசெட்டியார் தலைமையேற்றார். மதுரை வங்கி முன்னாள் தலைவர் ஆர்எம். முத்தையா செட்டியார், மீனாட்சிமைந்தன் வி.என். சிதம்பரம், டாக்டர். எம்ஆர். முத்தையா செட்டியார் உட்பட பலர் வாழ்த்திப் பேசினர்.

மணவாழ்த்து



கொரப்பனாபட்டி பழ.லெ. சொக்கலிங்கம் செட்டியார் பேரனும், சொ. லெட்சுமணன் புதல்வருமான லெட்சுமணன் என்ற சீனிவாசன், எம்.பி.ஏ.,க்கும் வலையபட்டி சுப.நா.சுப. வேலாயுதம் செட்டியார் புதல்வி அலமேலு, சி.ஏ.,க்கும் 21-11-99 அன்று வலையபட்டி மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்...

திரு. இராம. சுப்பையா அவர்கள் சொல்ல
சுப. வீரபாண்டியன் எழுதியது

இந்நூலை ஏன் வெளியிடவேண்டும் என்று எண்ணினேன் என்றால், என் நெருங்கிய தோழர்கள் பலர் "திராவிட இயக்கத்தின் பழைய செய்திகளை, இயக்கத்தின் தொடக்கநாள் துன்பங்களை நினைவுகூர்ந்து சொல்லுங்கள். நாங்கள் புத்தகமாக வெளியிடுகின்றோம்" என்று கேட்டார்கள். "ஆகட்டும் பார்க்கலாம்" என்றே கூறி வந்தேன். கடைசியாக என் கடைசி மகன் டாக்டர் வீரபாண்டியன் என்னை விட்டபாடில்லை. தொடர்ந்து என்னிடம் கேட்க நானும் சரியெனச் சொல்லி நிகழ்ச்சிகளை நினைவுகூற, அதையெல்லாம் தொகுத்து வீரபாண்டியன் சுவைபடக் கொண்டு வந்திருக்கிறான். யோசித்து, யோசித்து பல விஷயங்களைச் சொன்னது, சின்னச் சின்ன துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தது, சின்ன டேப்பில் (Micro Tape) சொன்னது எல்லாம் எனக்கு உற்சாகமாக இருந்தது.

என் வாழ்நாளில் என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கவலைப்படாமல் எனது கடமையை அடிநாள் தொட்டு சரிவரச் செய்து முடிப்பது ஒன்றே எனது லட்சியமாகக் கொண்டு, உழைத்து, உழைத்து வெற்றி கண்டதை எண்ணிப் பார்த்து மகிழ்வு கொள்கிறேன். எனது திராவிட இயக்கத்திற்காக பணம், பொருள் அனைத்தையும் நிறைய இழந்திருந்தாலும், இயக்கம் படிப்படியாய் வளர்ந்து இன்று மேலோங்கி நிற்பதை அடிமட்டத் தொண்டனாய் இன்றும் இருந்து கண்டு உவகை அடைகிறேன்

என் மனைவி விசாலாட்சி எத்தனை பேரை நான் வீட்டிற்கு அழைத்து வந்தாலும், சளைக்காது நல்லமுறையில் உபசரித்து அவர்களை மகிழ்வோடு எந்தக் காலத்திலும் அனுப்புவது ஒன்றே தனது பணியாகக் கொண்டதை இன்றும் எண்ணிப் பார்த்து பெருமைப்படுகிறேன்.

ஊர் ஊராக எங்கு சென்றாலும் என் மனைவியும் என்னுடன் வருவதும், மேடையில் பேசுவதும் மற்றவர்களுக்கு வியப்பாகவே இருக்கும். அவ்வப்போது ஏராளமாகப் பொருள் செலவு பண்ணுவதற்கும் அஞ்சுவதில்லை. வீடு, வாசல், மனைவி, மக்கள் இவைகளைப் பற்றி எந்தக் காலத்திலும் நான் கவலைப்பட்டதேயில்லை. என் மனைவியே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று நடத்தினாள். பிள்ளைகள் எல்லாம் நல்ல முறையில் வளர்ந்து இன்று நல்லதொரு நிலைக்கு உயர்ந்து இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் விசாலாட்சிதான்!

எங்கள் "சமதர்ம இல்லத்தில்" வராத தலைவர்களோ, தொண்டர்களோ இல்லை என்றே கூறலாம். அவர்களை அவ்வப்போது சிறப்புடன் கவனித்து அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியோடு இருக்கச் செய்வதில்தான் எங்கள் இருவருக்கும் மகிழ்ச்சி. தலைவர்களோடும், தொண்டர்களோடும் பழகிய முறைகளைப் பற்றியும், நிகழ்ச்சிகள் குறித்தும், இயக்கத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து வளர்க்கப் பாடுபட்ட நிகழ்ச்சிகள் குறித்தும் என் நினைவு வந்த வரையில் இந்நூலில் கூறி இருக்கிறேன்.

நம் இயக்கத்திற்காக என்னுடன் ஒத்துழைத்து, எனக்கு உறுதுணையாக இருந்து, நான் எடுத்த காரியத்தை முழு

வெற்றியோடு செய்து முடிப்பதற்குக் காரணமாக இருந்த எத்தனையோ பேரைப் பெற்று உள்ளேன். அவர்களைத்தான் பெரிய சொத்தாகக் கருதுகிறேன்.

சௌந்தர பாண்டியன், கி.ஆ.பெ. விஸ்வநாதன், மாயவரம் நடராஜன், நாகை காளியப்பன், மதுரை முத்து, சேலம் சித்தையன், ப. ஜீவா, ஸ்ரீரங்கம் துரைசாமி இன்னும் பல நூறு நண்பர்களும் இயக்கத்தை வளர்த்த விதத்தை எண்ணி வியக்கிறேன்.

வக்கீல் ஈபன், பள்ளிகொண்டான் சேர்வை, டாக்டர் நமசிவாயம், திருச்சி டி.டி. வீரப்பா, என்.ஆர். சாமி, தென்னரசு, ரெங்கநாயகி நாராயணசாமி, ஸ்பீக்கர் நாராயணசாமி, ராக்கப்பன் அம்பலம், மெய்யப்பன் அம்பலம், தேவகோட்டை இராம. வெள்ளையன், டாக்டர் சுப்பிரமணியம் முதலான பல பேருடன் தொடர்புடைய பல சம்பவங்கள் இந்நூலில் விடுபட்டுத்தான் போயுள்ளன. ஞாபகத்திலிருந்தே சொல்லியிருப்பதால், வருடங்களும் சில இடங்களில் முன்பின்னாக இருக்கலாம். அடுத்த பதிப்பு வரும்போது, இந்தக் குறைகளை நீக்க முயற்சிக்கிறேன்.

கட்சியில் எனக்கு என்ன கிடைக்கும் என்பதை விட்டு நம்மால் கட்சிக்கு என்ன செய்ய முடியுமோ அதை மனப்பூர்வமாகச் செய்து, பகுத்தறிவுக் கொள்கைகளை மக்கட்கு முடிந்த அளவு பரப்பி வருவது ஒன்றே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறேன்.

இன்று உடலால் ஓய்ந்து இருக்கிறேன். ஆனாலும், கொள்கைகளில் பிடிப்போடு இருக்கிறேன். – வளரும்

பிள்ளையார் நோன்பு

சேலம்

நகரத்தார் பிள்ளையார் நோன்பு 9-ஆம் ஆண்டு விழா 14-12-99 அன்று T.R.S. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. சுமார் 1400 பேருக்கு மேல் கலந்து கொண்டு இழை எடுத்தனர். 10ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகளாக தலைவர் SP. அழகப்பன், செயலாளர் M. சபாரெத்னம் பொருளாளர் SM. லெட்சுமணன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மாயூரம்

திரிலுகா நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் சார்பில் 14-12-99 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சுமார் 250 பேர் கலந்து கொண்டு இழை எடுத்துக் கொண்டனர்.

திருச்சி கருணாநிதி நகர்

ஸ்ரீ கற்பக விநாயகர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் பிள்ளையார் நோன்பு 14-12-99 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ராயவரம் ராம. ராமநாதன் செட்டியார் இல்லத்தில் நடைபெற்ற விழாவில் 120 பேர் கலந்து கொண்டு இழை எடுத்துக் கொண்டனர். ஆத்தங்குடி பெரி. பெரிச்சியப்ப செட்டியார், புதுவயல் வீர. நாராயணன் செட்டியார், சங்கத்தலைவர் பெரி.சி. சுப்பையா செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருநெல்வேலி

நகரத்தார் சங்கத்தின் சார்பில் 14-12-99 அன்று நகர விடுதியில் பிள்ளையார் நோன்பு திருநாள் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் பெரிய வெங்கடாசலம் செட்டியார் வரவேற்றார். செயலாளர் SP. சிதம்பரம் உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்தார். விநாயகர் பாடல்களை அனைவரும் சிறப்பாகப் பாடினார்கள். விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கோவை

நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பில் பிள்ளையார் நோன்பு விழா 14-12-99 அன்று சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் சுமார் 1,200 பேர் கலந்து கொண்டு இழை எடுத்துக் கொண்டனர். கோவை நகரத்தார் இளைஞர் சங்க நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இளைஞர் சங்க தலைவர் க. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.


சுவீகாரம் அல்லது திருமணம்

பள்ளத்தூர் இரணிக்கோயிலைச் சார்ந்த அழ. விஸ்வநாதன் பி.காம்., பட்டம் பெற்ற 29 வயது நிரம்பியவர். மாதவருமானம் ரூ. 5,000-00 சம்பளத்தில் தனியார்துறையில் பணியாற்றி வருகிறார். அழகும், குணமும் கொண்ட இளைஞரை சுவீகாரம் கூட்டிக் கொள்ளவும் அல்லது திருமணம் செய்து கொள்ளவும் விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


அழ. விஸ்வநாதன், அழ. தெய்வானை ஆச்சி (தாயார்)
4/151, ராஜவீதி, அரசூர் (அஞ்சல்),
சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்
போன்: 04295-51429

தந்தை பெயர்:
S. அழகப்பசாமி
நகர விடுதி, திருப்பரங்குன்றம்
போன்: 885665

ஆயிரத்தாண்டை அழைப்போம்...!



வருக!
புத்தாயிரத்தாண்டே...! வருக!
சற்றைக்கு முன்னால்
உன்னை
கடந்துபோன 1900களில்
எத்தனையோ...!
வேண்டாம்...! வேண்டாம்...!
புண்ணாகி, புழுவாகி
ரணமாகி, குணமாகி
கொஞ்சம் மறந்து
மனமாறியிருக்கிறோம்...!
உன்
உத்திரவாதங்களைப் பெற்ற
பின்னர்தான்
உனக்கு இங்கே அழைப்பு...!
அறிவியலிலும், மருத்துவத்திலும்
கண்தானம், குருதிக்கொடை
'கிட்னி' தானம், ஈரல்கொடை
என்று உடலுறுப்புகளின்
விற்பனை அங்காடியைத்
திறந்துவிட்டுப் போனது அது...!
மனிதனை உயிர்ப்பித்தது...!
ஆனால்
மனிதத்தை உயிர்ப்பித்ததா...?
உன்
விஞ்ஞானச் சந்தையை
நாடெங்கும் திறந்திடு...! அங்கே
அன்பையும், நேசத்தையும்
வணிகர்களாக்கிவிடு...!
நீயாவது 'எய்ட்ஸ்'க்கு
மருந்து சொல்வாயா...?



செயற்கைக்கோள்களில்
உலகம் கண்டோம்
உட்கார்ந்த இடத்திலே
டி.வி. பெட்டியில்...
இனி
நீ, என்ன செய்யப் போகிறாய்...?
சாதியும், மதமும்...
யுகம் யுகமாய்
பரவியதோ...?
ஆண்டவன் சொன்னாரா...!
இல்லை...
மானிடன் கண்டானா...?
தேசத்தலைவரையெல்லாம்
சாதித்தலைவராக்கி
தெருவோரச்சிலைகளாய்
நிறுவியது 1900...?
சாதீயன் கையில்
வெட்டரிவாள்...
மதம்கொண்டவன் பையில்
மனிதவெடிகுண்டு...!
யுத்தகளம் அமைக்கும் இந்த
வெறியர்களை மனிதராக மாற்ற
வழிகாண்பாயா...?
இந்த,
உத்திரவாதங்களையெல்லாம்
நீ
தந்தால்...
இந்தியரே...! தமிழரே...!
ஆரத்தி எடுங்கள்
ஆயிரத்தாண்டை அழைப்போம்...!

– நாகேஸ்வரன் சி.

வழக்காடு மன்றம்

பள்ளத்தூர் நகரத்தார் பெருமாள் ஆலயத்தில் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியாக 1-1-2000 அன்று வழக்காடு மன்றம் நடைபெற்றது. **"21-ஆம் நூற்றாண்டில் மனிதன் மகத்துவம் பெற மனமா? மற்றைய சூழலா?"** என்ற தலைப்பில் நடைபெற்றது. விழாவில் புலவர் மாமணி மா. முத்துராமன் நடுவராகவும், பேராசிரியர் கதி. கணேசன், பேராசிரியர் கரு. முத்தையா ஆகியோர் தொடுத்தும், மறுத்தும் பேசினர்.

கவியரசரின் காணக்கிடைக்காத காட்சி...



பாவேந்தர் பாரதிதாசனோடு நமது கவியரசர்



முன்னாள் அமைச்சர் கே.ஏ. மதியழகன், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், இந்நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆகியோருடன் கவியரசர்...



மருத்துவப்பகுதி


டாக்டர். எஸ். சிவசுப்பிரமணியன்,
M.S.F.I.C.S.F.A.C.S.,



கர்ப்பப்பை – மகளிர் மட்டும்

கேள்வி: இந்த மாதம் கர்ப்பப்பை மற்றும் அதனைச் சார்ந்த உறுப்புக்களைப் பற்றி விளக்கிக் கூறுங்கள் டாக்டர்?

பதில்: கர்ப்பப்பை நோய்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் அதனைச் சுற்றியுள்ள உறுப்புக்களின் உடற்கூறு (ANATOMY) பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக்க அவசியம். இங்கு நான் அதனை படம் போட்டு விளக்கிக் கூறியுள்ளேன்.



இந்தப் படத்தில் இருந்து கர்ப்பப்பைக்கு முன்புறம் மூத்திரப்பையும். பின்பக்கம் மலக்குடலும் உள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். சூலகம் (OVARY) இரண்டும் கர்ப்பப்பைக்கு இருபுறங்களிலும் தனியாக உள்ளன என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

கேள்வி: உடற்கூறு பற்றி விளக்கிய தாங்கள் கருத்தரித்தல் பற்றியும் விளக்கிக் கூறுங்கள்?

பதில்: கருத்தரித்தல் பற்றி அறியவேண்டுமானால் முதலில் மாதவிடாய் பற்றி அறிந்து கொள்ளவேண்டும். பெண்களுக்கு முதலில் மாதவிடாய் 12 முதல் 15 வயதுக்குள் ஏற்படுகிறது. இதற்குக்காரணம், பிட்யூட்டரி, சூலகம் இரண்டிலும் சுரக்கும் ஹார்மோன்களே காரணம். இந்த ஹார்மோன்களின் மூலம் கர்ப்பப்பையில் மாற்றங்கள் தோன்றுகின்றன. கர்ப்பப்பையின் உள்சவ்வு வளர்ந்து பின் 28 நாட்களில் பிரியும் நிலையில் மாதவிடாய் ஏற்படுகிறது. பிறகு மறுபடியும் இந்த உள்சவ்வு (ENDOMETRIUM) வளர்கிறது. இதுபோல் தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்கள் ஈஸ்ட்டரஜன் (OESTROGEN) புரோஜெஸ்டிரோன் (PROGESTERONE) என்ற இரண்டு ஹார்மோன்களின் அளவு வித்தியாசங்களால் நிகழ்கிறது. இந்த ஹார்மோன்கள் சூலகத்தில் சுரக்கின்றன. சூலகத்தை பிட்டியூட்டரி சுரப்பி F.S.H. (FOLLICLE STIMULATORY HORMONE) மற்றும் L.H. (LEUTINISING HORMONE) என்ற இரண்டு ஹார்மோன்களின் மூலம் கட்டுப்படுத்துகின்றது. இந்த மாற்றங்கள்

(CYCLICAL CHANGES) 28 நாட்களுக்கு ஒருமுறை நிகழ்கின்றன. 25 நாட்கள் முதல் 30 நாட்களாக ஒருசிலருக்கு மாறியும் வரலாம்.

சூலகத்தில் முதல் 10 நாட்களுக்குள் ஒரு கருமுட்டை வளர்கின்றது. அது முதிர்ந்து 12 அல்லது 13 நாட்களில் உடைந்து கரு வயிற்றின் உள் வெளியேறி விடுகிறது. சினைக்குழாயின் ஆரம்பத்தில் உள்ள FIMBRIA இந்த முட்டையை ஈர்த்து சினைக்குழாயின் உள் திருப்பி விடுகிறது. சினைக்குழாயின் உள் ஈர்க்கப்பட்டு நுழையும் முட்டை கர்ப்பப்பை நோக்கி நகர்ந்து செல்லும். இந்த சந்தர்ப்பத்தில் உடலுறவின் மூலம் ஆண் உயிரணுக்கள் கர்ப்பப்பையினுள் இருந்து சினைக்குழாயின் வழியாக நீந்தி முட்டையை நோக்கிச் சென்று முட்டையுடன் இணைந்து. சினை முட்டை சினைக்குழாயில் உருவாகிறது. சினைமுட்டை பின் கர்ப்பப்பை நோக்கி நகர்ந்து கர்ப்பப்பையின் உள்சவ்வில் வந்து ஒட்டிக்கொள்கிறது. பின் அங்கு வளர ஆரம்பிக்கின்றது. கரு ஒட்டிக் கொள்ளும் இடத்தில் நஞ்சு (PLACENTA) உருவாகிறது. இந்த நஞ்சின் மூலம் தாயின் இரத்தத்திலிருந்து சத்துப்பொருட்கள். பிராணவாயு போன்றவை குழந்தையின் திசுக்களுக்குக் கிடைக்கின்றன.

இந்த கருத்தரித்தல் நிகழாமல் போனால் 28 நாட்களில் கர்ப்பப்பையின் உள்சவ்வு ((ENDOMETRIUM) பிரிந்து மாதவிடாயின்போது வெளியேறி விடுகின்றது.

கேள்வி: பிறக்கும்போதே இந்த பிறப்பு உறுப்புக்களில் கோளாறு ஏற்படுமா டாக்டர்?

பதில்: ஆம். உறவினர்களுக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டால் (CONSANGUINOUS MARRIAGE) பிறவிக்கோளாறுகள் (CONGENITAL ABNORMALITIES) நிறைய ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. யோனியே இல்லாமல் பிறக்கலாம். (VAGINAL ATRESIA) கர்ப்பப்பை இல்லாமலே அல்லது சிறுத்தோ பிறக்கலாம் (RUDIMENTARY UTERUS) சூலகம் (OVARIES) இல்லாமலும் பிறக்கலாம். சினைக்குழாய் குழாய் வடிவில்லாமல் பிறக்கலாம் (CORD). CLITORIS என்ற உறுப்பு ஆண் உறுப்பு போல் வளர்ச்சியடைந்து (PHALUS) ஆண்குழந்தை போல். யோனியுடன் பிறக்கலாம்.


கேள்வி: இதுபோல் பிறவிக்கோளாறுகளைச் சரி செய்யமுடியுமா டாக்டர்?

பதில்: ஒருசில கோளாறுகளை ஓரளவுக்குச் சரி செய்யலாம். எல்லாக்கோளாறுகளையும் பூரணமாகக் குணப்படுத்துவது என்பது இயலாது.

சாதனையாளர் இராம. நாராயணன்

திரைப்படத்துறையில் நகரத்தாரின் சாதனைகள் மகத்தானவை. ஏவிஎம். நிறுவனம் பொன்விழா கொண்டாடி சாதனை படைத்தது. ஒரு திரைப்படத்தை இயக்கி படம் வெளி வருவதற்குள் அந்தக்குழுவினர் படும் அவஸ்தையே பெரும்பாடாகி விடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் திரு. இராம. நாராயணன் அவர்கள் தனது திரை வாழ்வில் தமிழ், வங்காளி, ஒரியா மொழிகளைக் கடந்து 100 படங்களை இயக்கிய அவரின் இந்த தனிமனித சாதனையை வாழ்த்துகிறோம்.

-ஆசிரியர்



வாங்க ஆச்சி... சமைக்கலாம்!

விசாலாட்சி, சென்னை

பாசிப்பருப்பு பணியாரம்

தேவையான பொருட்கள்:

பச்சரிசி அரை கிலோ
எண்ணெய் கால் கிலோ
வெல்லம் அரை கிலோ
பாசிப்பருப்பு 100 கிராம்

செய்முறை:

அரிசியை ஊற வைத்து, நிழலில் உலர வைத்து மிஷினில் அரைத்து, சலித்துக் கொள்ளவும். வெல்லத்தில் சிறிதளவு தண்ணீர் தெளித்து அடுப்பில் வைத்து, கரைய வைக்கவும். வெல்லம் கரைந்து கொதித்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கவும்.

சலித்து வைத்துள்ள மாவில் பாகை ஊற்றி பிசைந்து வைக்கவும். பாசிப்பருப்பை வேகவைத்துக் கொள்ளவும். கலந்து வைத்துள்ள மாவில் பாசிப்பருப்பை அதிகம் தண்ணீரில்லாமல் ஊற்றி தோசைமாவு பதத்திற்கு மாவை கரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெயைக் காயவைத்து அகலமான, வட்டமான கரண்டியால் பணியாரத்தை ஊற்றவும். மேலே எழும்பி வந்தவுடன் மறுபுறம் திருப்பி, சிவந்தவுடன் எடுக்கவும்.

மகிழம்பூ முருக்கு

தேவையான பொருட்கள்:

புழுங்கலரிசி 4 ஆழாக்கு
டால்டா 1/2 கிலோ
உளுந்தம்பருப்பு 3/4 ஆழாக்கு
உப்பு தேவையான அளவு

செய்முறை:

1. உளுந்தம்பருப்பை சிவக்க வறுத்து, மிஷினில் நைசாக அரைத்துக் கொள்ளவும்.
2. புழுங்கலரிசியை ஊறவைத்து, கிரைண்டரில் உப்புச் சேர்த்து ஆட்டிக் கொள்ளவும்.
3. ஆட்டி வைத்துள்ள அரிசிமாவுடன் உளுந்தம் மாவைச் சேர்த்து, கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும்.
4. டால்டாவைக் காயவைத்து, மகிழம்பூ முறுக்கு அச்சில் மாவைப்போட்டு, பேப்பரில் முருக்குகளை வட்டமாகப் பிழிந்து, தோசை திருப்பியின் உதவியால் எடுத்து, டால்டாவில் போட்டு பொன்னிறமாக வெந்தவுடன் எடுக்கவும்.

இப்போது மகிழம்பூ முருக்கு தயார்.

அடுத்த இதழில்...

உங்கள் குரல்

காவியக்குரல்

ராங்கியம் சிதம்பரம் செட்டியார் பேட்டி சுவை நிறைந்திருந்தது. கவியரசரின் காணக் கிடைக்காத காட்சியும், அவரின் கையெழுத்தும் இன்றைய இளைஞர்களுக்கு ஒருபாடம். திரு அண்ணாமலையார் தீபம் என காவியக் குரலாக ஒலிக்கிறது. கீப் இட் அப்...

- தஞ்சை திருநாவுக்கரசு

கவியரசரின் ஆசை

கவியரசர் சிறையிலிருந்து தன் தந்தையாருக்கு எழுதிய மடலை வெளியிட்டமைக்கு நன்றி. கவிஞர் வெள்ளைப்பணியாரத்தின் மீது கொள்ளைப் பிரியம் கொண்டிருப்பது கவியரசுக்குள் இருந்த ஆசையின் வெளிப்பாடு... அசத்தல்...

- கல்கி சரவணன், திருப்பூவணம்

பெ(வா)ரியார்

தந்தை பெரியாரின் சீடனாயிருந்து, வாரியாரின் சீடராக மாறிய ராங்கியம் சிதம்பரம் செட்டியாரின் அனுபவங்கள், பற்றற்ற தன்மை இளைய சமுதாயத்திற்கு நல்ல படிப்பினை. தன் தந்தையார் மீது அவர் வைத்திருந்த அன்பும், மரியாதையும் கண்டோம். நாத்திகத்திலிருந்த ஆத்திகத்தில் சிவபூஜை செய்யுமளவிற்கு அவரது மனமாற்றம் நகரத்தார்களின் பலமே ஆத்திகம் தான் என நம்ப வைத்தது...

- செல்வி. மீனாட்சி, விசாலாட்சி, சென்னை.

நிதானம்...!

நகரத்தார்குரல் நல்லமுறையில் வளர்ந்து பல்வேறு செய்திகள், கட்டுரைகளையும், புகைப்படங்களுடன் சிறப்பாக வெளியிட்டு வருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி... ஒவ்வொரு அடியும் நிதானமாக எடுத்து வைத்து வளர்ந்து வருவது பாராட்டுக்குரியது.

- கோவை. எஸ். அண்ணாமலை

பெருமை!

பெருமைக்குரிய நகரத்தார் பகுதியில் ஆசிரியர் ஏஎல்எஸ். அவர்களின் பெருந்தன்மையைப் பற்றி கூறியிருப்பது நன்றாகவும், பெருமையாகவும் இருந்தது.

- சோலையப்பன், காரைக்குடி

தொடரட்டும்!

நானும் என் திராவிட இயக்க நினைவுகளும் என்று சுப்பையா செட்டியார் எழுதும் நினைவுகள் இன்றைய நகரத்தார் இளைஞர்களுக்கும் ஒரு படிப்பினையாகவும், பாடமாகவும் நிச்சயம் அமையும் தொடர், தொடரட்டும்...

- சோ. நாராயணன், திருச்சி

வர்ணனை!

காசி விசாலாட்சி குடநீராட்டு விழாவில் பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களின் வர்ணனை செய்த காட்சியை நேரில் பார்த்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

- இராம. இராமநாதன், அரிமழம்

சபாஷ்!

சிரிப்போம்... சிந்திப்பதற்காக நகைச்சுவை ஆண்டுவிழாவில் குழந்தைகளின் ஜோக் மற்றைய செய்திகளும் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்கிறது. சபாஷ்...

- சிவராம்கிருஷ்ணன், மதுரை

தீர்க்கதரிசனம் அய்யப்பன் அவதாரம்!

அய்யப்பபக்தர்களுக்கு ஏன் மாலை அணிவித்து விரதமிருக்கிறோம் என்று விளக்கிய ஆசிரியரின் தீர்க்கதரிசனம் கண்டு மகிழ்ந்தேன்.

- எம்என். சுப்பையா, பாகனேரி

சிபாரிசு!

மாதவன் அவர்களும் நகரத்தார்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சிபாரிசு செய்யும் அளவிற்கு நற்குணம் கொண்டவர் என்பதை அறிந்து மகிழ்ந்தேன். **- மெ. சிதம்பரம்,** கோவை

அஞ்சலி

தோற்றம்:
23-4-1928



மறைவு:
13-10-1999

வேகுபட்டி மு. கண்ணப்ப செட்டியார்


முத்தையா பெற்றதிரு கண்ணப்பப் பெருந்தகையே
மீளாத் துயரத்தில் மூழ்கவைத்துப் பிரிந்தீரே
உற்றாரும் உறவினரும் உங்களது நினைவாலே
ஓயாமல் வருந்துகிறோம் உய்யவழி தெரியவில்லை
வற்றாத நதியாக வளர்செல்வம் ஈட்டுதற்கு
வழியாகப் பலதொழில்கள் வடிவமைத்துத் தந்தீர்கள்
சொத்தாகப் பலதந்து சிறப்பாகப் புகழ்தந்து
முத்தான நற்பண்பு மேலோங்கச் செய்தீர்கள்
வித்தாக உங்களது நல்லொழுக்கம் மனிதநேயம்
விளைவித்தீர் எங்களிடம் வழிநடப்போம் என்னாளும்
பகட்டாகப் பழகாத பண்பட்ட குணத்தாலே
பலபேரும் உங்களிடம் மரியாதை கொண்டார்கள்
பம்ப்பனா *வீட்டுப்பெயர் பாரெங்கும் விளங்கும்வகை*
செம்மையாய் வாழ்ந்தீர்கள் சிறப்பாகப் போற்றுகிறோம்
நல்லவழி காட்டியெம்மை நடத்திவந்த உங்களையே
இல்லையென எண்ணுதற்கு எங்கள்மனம் ஏற்கவில்லை
ஈடுசெய்ய இயலாத இழப்பைத் தந்துவிட்டு
நாடிச் சென்றுவிட்டீர் நினைவாக இறைவனிடம்
இட்டபணி அத்தனையும் இனிநாங்கள் செய்வதற்கு
இறைவனாய் இருந்தெமக்கு வழிகாட்ட வேண்டுகிறோம்

இங்ஙனம் குடும்பத்தார்

திருமதி. கண. மீனாட்சி ஆச்சி	–	மனைவி
கண. முத்தையா	–	மகன்
மு. காவேரி	–	மருமகள்
கண. அண்ணாமலை	–	மகன்
அண. உமா	–	மருமகள்
மா. ராதா	–	மகள்
பெரி. மாணிக்கம்	–	மருமகன்
பழ. அலமேலு	–	மகள்
மு. பழனியப்பன்	–	மருமகன்

மு.கண. இல்லம், 1/72, சுப்பையா கோயில் தெரு, வேகுபட்டி

தமிழக அறநிலையத்துறை அமைச்சருக்கு ஆறு. அழகப்பன் மடல்...



மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வணக்கம்...

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆளுகைக்குட்பட்ட சொந்தக் கோயில்கள் பின்வரும் ஏழு கோயில்கள்... 1. மாற்றூர், 2. இளையாற்றங்குடி, 3. வயிரவன்கோயில், 4. நேமம், 5. இலுப்பைக்குடி, 6. சூரக்குடி, 7. வேலன்குடி.

இக்கோயில்களில் இளையாற்றங்குடி மட்டும் அரசுப்பார்வையில் ஒரு கட்டத்தில் வந்துவிட்டது. இதனால் இக்கோயிலின் வளர்ச்சியும், பல பணிகளும் ஏனைய நகரத்தார் கோயில்களுக்கு ஒப்பாக அமையவில்லை. அரசு இத்திருக்கோயிலை மீண்டும் நகரத்தார்களிடம் முழுமையாக ஒப்படைக்க தாங்கள் வழிமுறை காணவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.


மேலும் இந்து அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களிலே தமிழில் வழிபாடு என்ற தமிழக அரசின் முயற்சி வெற்றியடைந்து வருகிறது.

தனியார் திருக்கோயில்கள் பேரெண்ணிக்கையில் உள்ளன. சில இடங்களில் பரம்பரை அறங்காவலர்கள் என்ற அமைப்பின் கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு இல்லை. தமிழ் வழிபாட்டை இக்கோயில்களிலும் நடைமுறைப்படுத்த தாங்கள் தக்கமுயற்சி மேற்கொள்ள வேண்டுகிறோம். அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் நாங்கள் நல்கிட ஆயத்தமாய் இருக்கின்றோம்.

பெறுநர்
முனைவர். தமிழ்க்குடிமகன் அவர்கள்
இந்து அறநிலையத்துறை அமைச்சர் (தமிழக அரசு)

அன்புள்ள
ஆறு. அழகப்பன்
தமிழ்ச்சுரங்கம் - சென்னை

சிவ... சிவ...



அண்மைக்காலத்தில் மிகப்பிரபலம் அடைந்துள்ள வேந்தன்பட்டி நெய் நந்திகேஸ்வரரைப் பலரும் அறிந்துள்ள அளவுக்கு, கேரளத்தில் உள்ள நெய் மகாலிங்கேசுவரரைப் பற்றி அறிந்திருக்கமாட்டார்கள். அவரைப்பற்றிக் காஞ்சிப் பெரியவர் தெரிவித்துள்ள தகவல் வருமாறு:

திருச்சூர் கோயிலில் (உள்ள) மகாலிங்கத்துக்கு எப்போதும் சுத்தமான பசுநெய்யால் அபிஷேகம் நடந்துகொண்டே இருக்கும். இப்படி ஆயிரம், பதினாயிரம் வருஷமாகச் செய்ததால் லிங்கமே தெரியாமல் ஒரே நெய்ப்பாறையாகத்தான் கர்ப்பகிரகத்துக்குள் தெரியும். நல்ல வெயில் காலத்திலும், அருகிலேயே நிறைய தீபங்கள் எரிந்து கொண்டிருந்தாலும் நெய் உருகுவதில்லை. இத்தனை நெய் நன்றாகக் குவிந்திருந்தும், ஒரு ஈ, எறும்பு அங்கே பார்க்க முடியாது.

ஆதாரம்: தெய்வத்தின்குரல், பகுதி 5

திருமணத்தில் சிக்கனம் கொள்வோம்...!

எஸ். சுப்பிரமணியன், தேவகோட்டை

பழ. அண்ணாமலை அவர்கள் மகேந்திரனுக்கு எழுதிய மடலில் நகரத்தார்களில் பெரும்பாலோரின்நிலை பரிதாபத்திற்குரியதாக உள்ளது என்றும் பலவீடுகள் இடிந்தும் மராமத்து செய்ய வழியின்றியும் இருக்கின்றன என்றும் வேதனைப்பட்டிருக்கிறார். அதன் விளைவே என்னுள்ளத்தின் வெளிப்பாடு...

இந்த அவலநிலைக்கு யார் காரணம்? சிந்திக்கவேண்டும். இரண்டாவது உலகப் போருக்குப்பின் பர்மா, மலேயா நாடுகளில் வாழ்ந்த நம்மவர்களுக்கு பெருமளவு நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டதால் சிலகாலம் இன்னல்களுக்கு உள்ளானோம். அதுவும் கொஞ்சகாலம் தான்.

பிற்காலத்தில் ஏற்பட்ட காலத்தின் மாற்றத்தால் நம்மின இளைஞர்களும், பெண்களும் நன்கு உணர்ந்து கல்வியிலும், பல தொழில்களிலும் முன்னேறி வருகிறார்கள். தங்களது வாழ்க்கையினை சிறப்பாக, வசதியாக அமைத்துக் கொள்ளும் நிலையிலும் இருக்கிறார்கள்.

அப்படி இருந்தும் ஏன் இந்த அவலநிலை?

மாதவருமானம் ரூ. 8,000, ரூ. 10,000 என உள்ளவர்கள்கூட பெண்களின் திருமணச் செலவை எப்படி சரிக்கட்டுவது என்றே திகைக்கிறார்கள். இரண்டு, மூன்று பெண்கள் இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். வீடு, சொத்துக்கள் எல்லாம் விற்றுத்தான் கரை சேர்க்க வேண்டியிருக்கிறது.

மிகக்குறைந்த செலவில் நடக்கும் திருமணங்களில்கூட ரூபாய் ஒன்னரை லட்சம்வரை செலவாகிறது. சராசரியான திருமணச்செலவுகள் ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து நாளுக்குநாள் இது அதிகரித்துக் கொண்டே போகிறது.

மற்ற சமூகத்தினரின் திருமணங்களோடு ஒப்பிடுகையில் நாம்தான் அதிகச்செலவு செய்கிறோம்.

பிராமண சமூகத்தில் மாப்பிள்ளையின் அந்தஸ்தைப் பொறுத்து ரூ. 75,000 முதல் 1,50,000 வரை செலவாகிறது.

ஆனால் நம்மவர்கள் அதிகம் செலவழிப்பதற்கு என்ன காரணம்? பெண்களுக்குத் தரும் சீதனம், மாமியார் சாமான், நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள் இவையெல்லாம் மிகவும் அதிகம்.

நம் திருமணங்களில் மாப்பிள்ளை வீட்டார் தனிமண்டபம், பெண்வீட்டார் தனிமண்டபம் அமைக்கிறார்கள். இது தவிர்க்கப்படவேண்டும். இருவீட்டாரும் ஒரே மண்டபத்தில் கலந்து கொள்ளலாமே?

திருமண விருந்தில் 50 சமையல் ஆட்கள் வேண்டியிருக்கிறது. ஆனாலும் அதிலும் குழப்பம்தான். ஒருவர் ரசம் என்று குரல் கொடுக்க இன்னொருவர் மோர் என்று குரல் கொடுக்க இன்னொரு பக்கத்தில் தண்ணீர், தண்ணீர் என்ற குரல்கள் வேறு. ஏன் இந்தக் குழப்பம்? மற்ற சமூக திருமண விருந்துகளில் ஒரு இலைக்கு ஒரு டம்ளர், ஒவ்வொரு பண்டங்களுக்கும் ஒரு நபர் என்று வரிசையாக எந்தவிதக் குழப்பங்களுமின்றி பந்தியிடுகிறார்களே. ஏன் நம்மவர்கள் அவர்களைப் பார்த்து தெரிந்து கொள்வதில்லை?

நம் திருமணங்களில் ஏராளமான பட்டுப் புடவைகள் வேறு. இது தேவையா? மற்ற சமூகத்தினர் இரண்டு அல்லது மூன்று

பட்டுப்புடவைக்கு மேல வாங்குவது இல்லையே? நம்மிடமிருந்து பல பண்பாடுகளை, பழக்கவழக்கங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும்போது மற்றவர்களிடமிருந்து ஒருசில நல்ல பழக்கங்களை நாம் ஏற்றுக்கொள்வது ஒன்றும் தவறல்லவே?

சிலகாலம் விட்டுப் போயிருந்த சாமான் பரப்பும் சம்பிரதாயம் மறுபடியும் ஆரம்பித்து வருகிறது. பல ஆயிரங்களை சாமான்களில் முடக்கி அதை வைப்பதற்கு இடமில்லாமல் வாடகைக்கு வேறு வீடுகளைப் பிடித்தும், அதனால் தொழில் சுருங்கப்போகும்போது 2வட்டிக்கு கடன் வாங்குவதும் வழக்கமாக உள்ள இந்த நிலை மாறவேண்டும்.

ஒருமுறை சென்னையில் நடைபெற்ற நகரத்தார் மாநாட்டில் பேசிய கருமுத்து தியாகராசசெட்டியார் நகரத்தாருக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கு அவர்கள்தான் காரணம். நாம் விழாக்களில் ஏற்படும் செலவுகளை குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தன் பேரனின் புதுமையை ஒரு 100 பேரை மட்டும் அழைத்து சிக்கனமாக நடத்தியிருக்கிறார். அவர்கள் காட்டிய சிக்கனத்தன்மையை நாம் ஏன் தொடரவில்லை? ராஜா அவர்கள் நினைத்தால் அதிவிமரிசையாக நடத்தியிருக்க முடியுமே? அந்தப்புதுமை நம்மவர்களுக்கு ஒருவழிகாட்டுதல் அல்லவா?

ராங்கியம் கருப்பர் கோயில்
அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகத் திருப்பணி



பிரமாதி ஆண்டு ஆவணி 26ஆம் தேதி (12-9-99) அன்று தொடங்கி **ராங்கியம் கருப்பர் கோயில் கும்பாபிஷேகத்திற்கான திருப்பணி வேலைகள்** நடைபெற்று வருகிறது. விரைவில் கும்பாபிஷேகம் நடத்துவதற்காக திருப்பணிக்குழுவினர் அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருப்பணிக்கு தாராள நன்கொடை வழங்கி ராங்கியம் கருப்பரின் அருள்பெற்று உய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடையினை அனுப்ப விருப்பமுள்ளவர்கள் **ராங்கியம் கருப்பர் கோயில் திருப்பணிக்குழு, மதுரை** என்ற பெயரில் டிராப்ட், செக் எடுத்து அனுப்பலாம்.

மற்ற விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மா. இராமரத்னம், வழக்கறிஞர், துணைப்பொதுச்செயலாளர்
மனை எண். 31, கே.கே. நகர், மதுரை - 625 020. போன்: 582200, 582270
தலைவர்: **சுசெ.அ.மு. சேதுராமன் செட்டியார்**
நிர்வாகச் செயலாளர்கள்
புலவர் அ.நா. மலையாண்டி செட்டியார், ராம. ஏகப்பசெட்டியார்
பொருளாளர்: **வடு.மு.ராம.மு. ராமநாதன் செட்டியார்**

இஸ்லாமியரின் வால்மீகி...

ஒருகாலத்தில் ஒரு விநோதமான கொள்ளைக்காரன் இருந்தான். அவன் துறவிகளைப்போல வேடம் கொண்டு கையில் ஜபமாலை காவியுடை, கமண்டலங்களோடு திரிவான். மாறுவேடத்தில் கொள்ளையடிக்கும் இவன் ஒரு இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவன். வழிப்பறி கொள்ளை என இருப்பவர்களிடம் கொள்ளையடித்து வறுமையில் வாடும் ஏழை, எளியவர்களுக்குக் கொடுத்து விடுவான். அதுமட்டுமின்றி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாமல் "நமாஸ்" படித்து வந்தான். அவனுடைய கூட்டாளிகளுக்கும் "நமாஸ்" படிக்கச் சொல்லுவான். அப்படிப் படிக்காதவர்களை தன் கூட்டத்திலிருந்தே வெளியேற்றி விடுவான். இப்படி அவனுடைய நடவடிக்கைகள் எப்போதுமே விநோதமாகவே இருக்கும்.

ஒருநாள் அந்தக்கொள்ளைக் கூட்டத்தினர் தங்கியிருந்த இடத்தின் வழியாக சில வியாபாரிகள் வணிகத்திற்காகச் சென்று கொண்டிருந்தனர்.

வணிகர்களைக் கண்ட கொள்ளைக் கூட்டம் அவர்கள் மீது பாய்ந்து தாக்கி பணம் மற்றும் பொருட்களை கொள்ளை அடித்துவிட்டுச் சென்றனர். அந்தக் கூட்டத்திலிருந்து தப்பிய ஒரு வணிகன் தூரத்தில் தெரிந்த கூடாரத்தை நோக்கி ஓடினான்.

அந்தக் கூடாரத்தில் அந்த துறவி வேடமணிந்த கொள்ளைக் கூட்டத் தலைவன் ஜபமாலையை கையில் வைத்தபடி ஜபம் செய்வது போல் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தான்.

அது நடிப்பு என்று அறியாத அந்த வியாபாரி, "சுவாமி! எனக்கு பெரிய ஆபத்து வந்து விட்டது. கொள்ளையர்களிடமிருந்து தப்பித்து வந்தேன். என்கூட வந்த பல வியாபார நண்பர்கள் கொள்ளையர்களிடம் சிக்கிக் கொண்டார்கள். தயவுசெய்து இந்தப் பணமூட்டையைத் தாங்கள் வைத்திருங்கள். சற்றுநேரத்தில் நான் வந்து எடுத்துச் செல்கிறேன்" என்று கெஞ்சினான்.

துறவி வேடத்திலிருந்த அந்த கொள்ளையர் தலைவன், "அதோ அந்த இடத்தில் வைத்துவிட்டுப் போ!" என்று சொல்லிவிட்டு தவம் செய்வது போல் நடித்தான்.

வியாபாரியும் துறவி காட்டிய இடத்தில் வைத்துவிட்டு மறைவான வேறொரு இடத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டான்.

கொள்ளையர்கூட்டம் சென்றதும் துறவியின் கூடாரத்திற்கு வந்தான்.

கூடாரத்திற்குள் வந்த வியாபாரி அதிர்ந்தான். கொள்ளையர் கூட்டம் அந்த கூடாரத்தில் நிறைந்திருந்தனர். எட்டிப் பார்த்த வியாபாரிக்கு உடல் நடுங்கத் தொடங்கியது. கொள்ளையடித்த பொருட்களை திருடர்கூட்டம் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர்.

துறவிதான் கொள்ளைக் கூட்டத் தலைவனா? என்று பயந்து நடுங்கினான். வியாபாரியைக் கண்ட துறவியின் வேடத்திலிருந்த திருடர் தலைவன், "இங்கே ஏன் வந்தாய்?" எனக் கேட்டான்.

"ஐயா சாமி! நான் உங்களிடம் விட்டுச் சென்ற பணமூட்டையை வாங்கலாமென்று வந்தேன். ஆனால் நான் செய்த தவறு புரிந்து விட்டது. எனவே நான் போகிறேன்" என்று வியாபாரி சொன்னான்.

அதற்கு கொள்ளைக் கூட்டத்தின் தலைவன், "நீ என்னிடம் பாதுகாப்பிற்காக விட்டுச்சென்ற பணம், அதோ அங்கேயே கிடக்கிறது பார் எடுத்துக் கொண்டு போ" என்றான்.

வியாபாரியும் ஆச்சரியமாகப் பார்த்தான்.

பணம் அவன் வைத்த இடத்திலேயே இருந்தது. வியாபாரி மகிழ்ச்சியோடு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

தலைவனின் இந்தச் செயலைக் கண்ட கொள்ளையர்கள் அவனிடம், "கைக்கு வந்த பொருளை ஏன் நழுவ விட்டீர்கள்? இது சரியில்லை" என்றனர்.

அதற்கு தலைவன், "நீங்கள் சொன்னது சரிதான்! ஆனால், அந்த வியாபாரி நான் கடவுளின் மீது உண்மையான பக்திகொண்ட துறவி என்று நினைத்துத்தான் என்னிடம் விட்டுச் சென்றான். ஆண்டவனை மகிழ்விக்கச் செய்யும் இந்த துறவி வேடத்திற்கான என்ன நற்குணம் தேவையோ அதை நான் கடைப்பிடிக்க வேண்டும் அல்லவா! அதைத்தான் நான் செய்தேன்". இந்த கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் தான் பிற்காலத்தில் 'பஜல் சுயாஜ்' என்ற புகழ்பெற்ற மகாத்மாவாக மாறினான். இஸ்லாமியரின் போற்றுதற்குரிய ஞானியாக விளங்கினார். இவரை இஸ்லாமியரின் வால்மீகி, எனக்கூட கூறலாம்.

- சௌமியன்

நகரத்தார்களுக்கு வேண்டுகோள்

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் சோமலெ பற்றிய நூல் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. சோமலெ அவர்கள் பயண இலக்கியம், நகரத்தார் சமூகம், சுற்றுலாத்துறை, குடமுழுக்கு மலர்கள், ஆங்கில மொழிபெயர்ப்பு போன்ற பலதுறைகளிலும் ஆற்றிய பணிகளையும், படைப்புகளையும் நினைவு கூரும் வண்ணமாக வரும் இந்நூலை மதுரை செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியை டாக்டர் நிர்மலா மோகன் எழுதுகிறார். பேராசிரியர் தமிழண்ணல் அவர்களும், பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன் அவர்களும் எழுதுபவருக்கு உறுதுணையாக உதவி வருகிறார்கள். சோமலெ தொடர்பான அரிய செய்திகளையும், புகைப்படங்களையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்

சோமலெ. சோமசுந்தரம், சென்னை

அனுப்ப வேண்டிய முகவரி:
பேராசிரியை. நிர்மலா மோகன்
78/1, ஆழ்வார்நகர், நாகமலைப்புதுக்கோட்டை, மதுரை - 625 019.
தொலைபேசி: வீடு 858405 கல்லூரி 743707

ஈரோடு

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 31-12-99 அன்று கூட்டு இறைவழிபாடும், "நாளைய நூற்றாண்டை வரவேற்போம்", "கங்கை நதியும் காசியம்பதியும்" எனும் தலைப்பில் பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது.

மா.பழ. மாயாண்டி செட்டியார் ஏஎன். செல்வநாதன், என்.எஸ்எஸ். சிவசுப்பிரமணியன் செட்டியார், எல். வள்ளியப்பன், எஸ். பழனியப்பன், எம். காளத்திநாதன் ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். 14-12-99 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சுமார் 600 பேர் இழை எடுத்துக் கொண்டனர்.

வ.சுப.மா.வின் தமிழ்ப்பற்று, கடமையுணர்வு, துணிவு

(மேலைச்சிவபுரி முத்துராமன் - திருப்பூர்)

முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் அமைத்துள்ள தமிழகப்புலவர்குழுவின் தலைவராக வ.சுப.மா. அவர்கள் அமர்த்தப்பட்டு, வழிநடத்தி வந்தார்கள். புலவர்குழுவின் வெள்ளிவிழா 1983 அக்டோபரில் சேலம் தமிழ்ச்சங்கத்தாரால் நடத்தப்பெற்றது.

விழாவின் முதல்நாள் கூட்டத்தில், வ.சுப.மா. தலைமை தாங்கினார்கள். கூட்டத்தில் சேலத்துக்காரர் ஒருவர் சொற்பொழிவாற்றியபோது பின்வருமாறு ஒரு கருத்து மொழிந்தார். அதாவது இரண்டு தமிழ்ப்புலவர்களை இரவில் ஓர் அறையில் அடைத்துப் பூட்டிவைத்து, மறுநாள் காலை திறந்து பார்த்தால் இருவருள் ஒருவர் அடிபட்டுச் செத்துக்கிடப்பார் என்று கூறினார். அதைக்கேட்டதும் பார்வையாளர்கள் கைதட்டி நகைத்தார்கள். அவரைத் தொடர்ந்து அடுத்துப் பேசவந்த ஒருவர் முன்னவரினும் ஒருபடி மேலே போய்விட்டார். இருவரில் ஒருவர் செத்துக் கிடப்பார் என்று முன்பு பேசியவர் கூறினார். ஒருவர் மட்டுமல்ல இருவருமே செத்துக் கிடப்பார்கள். அந்த அளவுக்கு வாதம் புரிந்து அடிதடியில் இறங்கியிருப்பார்கள் என்று தெரிவித்தார். உடனே அவையினர் நெடுநேரம் கைதட்டி சிரிப்பாய்ச் சிரித்தார்கள்.

இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது வ.சுப.மா. அவர்கள், இடையில் எழுந்துபோய் ஒலிபெருக்கிக் கருவியைப் பிடித்துக்கொண்டு நீங்கள் எங்களை அழைத்துப் பெருமைப் படுத்தியது போதும் - இனிமேல் எங்கும் என்றும் இதேபோல் பேசாதீர்கள் என்று முழங்கிவிட்டு அமர்ந்தார். அதன்பிறகு அவையின் நடைமுறையே மாறி நல்ல நிலையை எய்தியது.

எல்லாத் தொழிலாளர்களுமே - எல்லாத் துறையினருமே ஒருவருக்கொருவர் மாறுபடுவது உலக இயற்கை. மற்றவர்கள் அறையில் ஆடுகிறார்கள். தமிழ்ப்புலவர்கள் அம்பலத்தில் ஆடுவதால் தெரிகிறது. இவ்வாறு தமிழ்ப்புலவர்களைக் குறைவுபடுத்துவது, தமிழைக்குறைவு படுத்துவதாகவே பொருள்படும். இதனைப் பொறுக்கமுடியாத வ.சுப.மா.வின் தமிழ்ப்பற்றும், கடமை உணர்வும், துணிவும் பெரிதும் பாராட்டத் தக்கனவாகும்.

ஆதாரம்: சுந்தரசண்முகனாரின் நூல்

செட்டி நாட்டு தாலாட்டு பாட்டு !

மீன் பூக்க நிலவரிக்க மின்னல் குளம் பெருக!
மின்னலிலே காதவழி தம்பி நீ விளையாடி வந்தாயோ!
அச்சடிக்க பொன்விளைய ஆதிச்சார் உன் நாடு
வைத்திருக்கத் தந்த மகன் வாழுவான் நூறுகுடி
குடகுசிறுமலையாம்! கன்னியவான் ஆடுமலை!
அரிசித்தினை விளையும் நீ பிறந்த அண்ணாமலை நாடு!
யானைகட்டிப் போரடிக்கும் அம்மானார் சேனைதலம்!
குதிரை கட்டிப் போரடிக்கும் கோடிபேர் சேனைதலம்!
மான் கட்டி போரடிக்கும் மாமுடிமார் சேனைதலம்!
அம்மானார்செய்களிலே அவலுக்கொரு நெல் எடுத்து!
இடைச்சி தினைக்கூட்டி இலைபோல் அவல் எடுத்து!
அவல் அழுகை கண்டதம்பி நீ அழுகை அமர்ந்தாயோ!
என் அரிய அம்மானார் என்ன கொண்டு வந்தார்கள்!
அக்கரையில் சக்கரையும்! அதிமதுரத் தென்னையும்!
கோடைப் பலாச்சுளையும்! குலை சேர்த்த மாங்கனியும்!
பருவப்பலாச்சுளையும்! பக்குவம் வந்த மாங்கனியும்!
போட்டு விளையாட பொன்னாலே பொம்மையாம்!
கட்டி விளையாட காசி குண்டுமணி!
வைத்து விளையாட வண்ணக் கிலுகிலுப்பை!
நெத்திக்கு சிட்டி! நிழல் பார்க்க கண்ணாடி!
காலுக்குத் தண்டை! கைக்கு கணையாழி!
கொண்டுவந்தும் காண்பாக, கோதைக்கிளைக் கம்மானார்!
முல்லைப்பூ கட்டடமாம், முகப்பு எல்லாம் உத்திரமாம்!
முகப்பைத் திறந்துவிட்டால் முல்லைப்பூ வாசனையாம்!
காடுவெட்டி நாடாக்கி கள்ளரெல்லாம் உள்அமர்த்தி!
நாடுவிட்டும் வாராக ராஜாக்கள் உங்கள் ஐயா!
பரட்டைப்புளியமரம்! பந்தடிக்கும் நந்தவனம்!
நந்தவனம் கண்திறந்து மல்லிகைப்பூ எடுத்து!
பூஎடுத்து பூஜை பண்ணும், புண்ணியவார் பேரனோ!
மலர்எடுத்து பூஜை பண்ணும், மகராஜா பேரனோ!
அரும்பு எடுத்து பூஜை பண்ணும் அர்ச்சுனவார் பேரனோ!!!

- தமிழரசி

இந்த தாலாட்டுப் பாட்டுக்கு சிறப்புபரிசு...
தமிழரசி முழுமுகவரியைக் கூறி பெற்றுக்கொள்ளலாம்...

- ஆசிரியர்

புத்தாயிரத்தாண்டின் இனிய வாழ்த்துக்கள்...

இந்தியாவிலேயே முதலாவதாக
100% பாத்தோ ஜெனிக்
பாக்டீரியா நீக்கப்பட்ட

ஆரோக்யா பாக்கெட் பால்

(இப்போது சிவகங்கையில்)

நமது பகுதியில் நடைபெறும் திருமணம் மற்றும் அனைத்து விசேஷ காரியங்களுக்கும் ஆர்டரின் பேரில் 'ஆரோக்யா' பாக்கெட் பால் சப்ளை செய்கிறோம். தேவைக்கு:

லயன் M. குணசேகரன், M.A., D.Co-op.,
ஆரோக்யா பாக்கெட் பால் (24 மணி நேரம்)

மாயா ஏஜன்ஸிஸ்

அரண்மனை வாசல், சிவகங்கை - 630 561

தென்னிந்தியாவின் நம்பர் 1 ஐஸ் கிரீம்

அருண் ஐஸ் கிரீம்ஸ்

டீலர்: குணா ஐஸ் லேண்ட்

அரண்மனை வாசல், சிவகங்கை - 630 561
போன்: 41001 வீடு: 40673

திருமணம் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு ஆர்டரின் பேரில் ஐஸ்கிரீம் சப்ளை செய்கிறோம். டோர் டெலிவரி உண்டு.



☎ 42405, 42406.

பழநி பரிமள விலாஸ்

S.சித்தனுதன்

ஜவ்வாது வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
சிறந்தது,
வாங்கி உபயோகியுங்கள்.

SriDeviArts

S.சித்தனுதன் சன்ஸ், அடிவாரம், பழநி. 624 601.

வள்ளல் அழகப்பசெட்டியார் தன் மகள் உமையாளின் திருமணத்திற்கு விடுத்த அழைப்பு மடல்...

உ சிவமயம்.

RM. ALAGAPPA CHETTIAR, M. A.
BARRISTER-AT-LAW

K. V. AL. M. RAMANATHAN CHETTIAR
Camp. Bangalore
Recd. 20 ... 1943
Replied 21 MAY 1943

Pudukad Mills P. O.,
(Cochin State)

16 — — 194

ராமநாதன் செட்டியார் அவர்கள்,

அழகப்பன் எழுதிக்கொண்டது. இப்பவும், இவ்விடம் லெட்டர் வரத் தெரிவரும்மே. அவ்விடம் தாங்கள் எழுதிய சித்திரை மாதம் 12உ லெட்டர் வந்துசேர்ந்தது.

இப்பவும், நானும் இன்னும் நாலைந்து வேலையில் மதராஸ் போய் அங்கிருந்து 20உவாக்கில் ஊருக்குப் புறப்படுகிறேன். தாங்களும், பொம்பிளைகளையும், சாலி, சோலச்சி, வசந்தாவையும் கூட்டிக்கொண்டு அவசியம் ஒருவாரம் முன்னாடியே வந்துபோயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது. தங்களுக்கு நிச்சயதார்த்தம் செய்து கொள்ளப்போகிற விஷயத்தை சொல்லுவதற்காக கோட்டையூருக்கு டெலிபோன் பண்ணியதில் அக்ருத்திரி, மதராஸ் புறப்பட்டு விட்டதாகச்சொன்னார்கள். தாங்களும், தங்கள் பொம்பிளைகளும் எப்போதும் இருந்துவந்ததுபோல் இப்பவும் இருந்து நம்மள் உமையாள் கல்யாணத்தையும் சிறப்பாக நடத்தி வைக்கவேண்டும். நிச்சயதார்த்தம் செய்து கொள்ளுவதற்கு நம்மில் பொம்பிளைகள் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று இருந்தாலும், என் விஷயத்தில் அவசியம் வந்து நடத்தி வைக்கும்படி செய்ய வேண்டும். இந்த லெட்டர் வந்ததும் பதில் விபரமாக எழுதியனுப்பி வைக்கவேண்டியது. மற்றவை பின்பு. வேணும்.

வெள்ளையரின் பார்வையில் வேள்வணிகர்...!

- மீனா இராமநாதன்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்
என்றான் பாவேந்தன் பாரதி.

நம் நகரத்தார்கள் வாழ்முறை பற்றியும் நாமே நமக்குச் சொல்லிக் கொள்வதில் பெருமையில்லை. இந்தியாவிற்கு வெளியேயும் நமது புகழ் பரவியுள்ளது. ஆங்கிலேயர் பார்வையில் நமது இனம் எப்படி இருந்தது? எட்கர் தர்ஸ்டான் என்னும் ஆங்கிலேயர் 1909-ல் எழுதிய "கேஸ்ட்ஸ் அண்ட் ட்ரைப்ஸ் ஆப் சௌத் இண்டியா" என்னும் நூலில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் குறித்துப் பல செய்திகளை வெளியிட்டுள்ளார். அதன் சில பகுதிகளின் தமிழாக்கமே இக்கட்டுரை.

மற்ற எல்லாவகைச் செட்டியார்களிடம் இருந்தும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மிக வேறுபட்டவர்களாக விளங்குகிறார்கள். மதுரை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஜமீனுக்குட்பட்ட திருப்பத்தூர் தேவகோட்டை பகுதிகளைத் தலைமையிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இப்பகுதியில் எல்லா இனங்களையும்விட முன்னணியில் இருந்த இவர்கள் பர்மா, இலங்கை, சைகோன், சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு உடையவர்களாக உள்ளனர்.

இவர்கள் நம்பிக்கைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்கள். மேலும் வியாபார நுணுக்கத்திலும், மற்றவரோடு ஒத்துழைப்பதிலும், நிர்வகிப்பதிலும் ஐரோப்பிய வணிகர்களுக்கு இணையானவர்கள்.

இவர்களில் ஒருசிலரே ஆங்கிலக்கல்வி கற்றிருந்தனர். எனினும் தற்காலக் கல்வி புத்தக அறிவைத் தருமே தவிர, வியாபாரத்திலோ அல்லது வாழ்வின் யதார்த்தங்களிலோ உதவாது என அறிந்திருந்தனர். எனவே அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு எளிமையான நீண்டகால வியாபாரப் பயிற்சிகளை அளித்து வந்தனர். அந்தப் பயிற்சிகளே எந்தத் தொழிலையும் முறையுடன் நடத்தவும் அதில் மேல்நிலை அடையவும் உதவி செய்தன. லாபமாகப் பெறப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் மூலதனமாக்கப்பட்டு மேலும் லாபங்கள் பெறப்பட்டன. இவர்களில் பெரும்பாலோர் சொந்தத்தொழில் புரிபவர்கள். அவ்வாறு இயலாதோர்கள் தங்கள் இனத்தார் தவிரப் பிறரிடம் பணிபுரிய மாட்டார்கள்.

மிகச் செல்வந்தர்களாக இருந்தபோதும், இவர்களுடைய வாழ்க்கை எளிமையானது. குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு ஆண்குழந்தைக்கும் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படும். அந்தத்தொகையும் அதிலிருந்து பெறப்படும் வருமானமும் அக்குழந்தையின் கல்விக்கும் பிற்காலத்தில் தொழிலுக்கான மூலதனத்திற்கும் உதவியாக அமையும். இக்குலத்தில் உள்ள பெண்கள் கூடைகள் முடைந்தும், நூல் நூற்றும் வீட்டுத் தேவைகளின் ஒரு பகுதியை நிறைவு செய்தனர். வருமானத்திற்குட்பட்டே ஆண்களும் பெண்களும் குடும்பம் நடத்தி வந்தனர்.

இவர்கள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இனத்தில் உள்ள பெரியவர்கள் மூலமே தீர்வு பெற்றனர்.

இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் மிகுந்த

சமய நம்பிக்கையும் கோவில்களுக்குச் செலவு செய்வதில் தாராள மனப்பான்மையும் கொண்டிருந்தனர். சைவத்தைத் தழுவிய இவர்களில் பெரும்பாலோர் மொட்டை அடித்தும் தங்கமிடப்பட்ட ருத்ராட்சம் அணிந்தும் வந்தனர். இவர்கள் தரும காரியங்களுக்காகத் தென்னிந்தியாவில் பெயர் பெற்றவர்கள்.

இவர்கள் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கி வைக்கப்பட்டு அதிலிருந்து கோயில் திருப்பணிகளும், தரும காரியங்களும், வேத பாடசாலைகளும், அன்னதான மடங்களும் நடத்தி வந்தனர். இவர்களால் திருப்பணி செய்யப்பெற்ற கோயில்களில் பெரும்பாலானவைகள் சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை போன்ற பாடல் பெற்ற தலங்களாகும்.

இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அங்கிருப்பவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கித் தரும காரியங்கள் ஆற்றி வந்தனர். கோயில் கட்டுவதையும் குறிப்பாகச் சுப்பிரமணியர் கோயில் கட்டுவதையும் செய்து வந்தனர். இதுபோல் கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கை, பர்மா, சிங்கப்பூரில் செலவிடப்பட்ட தொகை மட்டும் சுமார் ஒரு கோடியாகும். 1906-ம் ஆண்டில் கரூர் பசுபதீஸ்வரர் கோயில் ரூ.50,000-00 செலவில் இவர்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது. 'திருவானைக்கா கோயில்' பல லட்சம் செலவில் திருப்பணி செய்து வைக்கப் பெற்றது.

இதுபோன்று நகரத்தார்களைப் பற்றி எழுதும் ஆங்கிலேயர் நகரத்தார்களின் கோயில் பிரிவுகளையும், சூப்பிடி, திருவாதிரை, புதுமை, தீர்த்தம் குடித்தல் மற்றும் திருமணப் பழக்கங்களைப் பற்றியும் விபரமாக எழுதியுள்ளார்கள்.

கடந்தகாலக் கதைகளையும் பெருமைகளையும் பேசுவதால் என்ன பயன் என்ற கேள்விக்குக் கவியரசு கண்ணதாசன் சொன்ன பதில், "கடந்த காலத்தில் வாழ்ந்திருந்த விதம் தெரிந்தால் தான் நிகழ்காலத்தில் நாம் தாழ்ந்திருக்கும் விதம் தெரியும்" ஆகவே முற்காலச் சரித்திரத்தைத் தெரிந்துகொண்டு எதிர்காலச் சரித்திரத்தைப் படைக்கப் பாடுபடுவோம்.

கடவுளை நிரூபிக்கத் தயார்!

ஒருமுறை நாத்திகர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் கடவுள் இருப்பதாக நிரூபித்தால் ரூ. 10,000-00 பரிசு தருவதாக அறிவித்திருந்தார்கள். உடனே மதுரை ஆதீன கர்த்தர் (மூலவர் திருஞான சம்மந்தர் ஞானபீடத்தின்) 294ஆவது குருமகா சன்னிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞான சம்மந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் நாத்திகர்களின் அறிவிப்பை நாளிதழிலில் பார்த்தவுடன் அந்தப் பத்திரிகைக்கு "கடவுளை நிருபிக்கத் தயார்" என அறிக்கை வெளியிட்டார். அறிக்கையில் "ஐந்து ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமியுங்கள். அவர்களில் இருவர் இந்துமதத்தைச் சேர்ந்தவர்களும், இருவர் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களும், ஒருவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கட்டும்... நான் வந்து கடவுள் இருப்பதை நிரூபிக்கிறேன்..." என்று கூறியிருக்கிறார். அப்போது நாத்திகர்களிடமிருந்து எந்தவித பதிலும், ஏற்பாடும் வரவேயில்லை.

DOMESTIC TERM DEPOSITS

15 days to 29 days	5.50%
30 days to 60 days	6.50%
61 days to 90 days	7.50%
91 days to 180 days	8.50%
181 days to less than one year	9.50%
1 year and above but less than 2 years	10.00%
2 years and above but less than 3 years	10.50%
3 years and above	11.00%

LESS THAN 2 YEARS

Single Deposit over 0.5% over the rate
Rs. 15.00 lakhs prescribed above
The revised interest rate structure for NRE & NRNR Term Deposits

PRECLOSURE OF TERM DEPOSITS

Preclosure of Deposit Within 14 days from the date of Deposit	No interest payable
Preclosure between 15th day and 29th day	2% less than the applicable rate
Preclosure after 29 days (ie. 30 days & above)	1% less than the applicable rate

FOR NRI DEPOSITS
NRE TERM DEPOSITS

6 months to less than 1 year	9.50%
1 year and and above but less than 2 years	10.00%
2 years and above but less than 3 years	10.50%
3 years and above	11.00%

NRNR TERM DEPOSITS

6 months and above upto 3 years	11.0%

DEPOSITS UNDER FCNR (BANK) SCHEME

Period	Rate of Interest (% p.a.)		
	GBP	USD	DEM / EURO
1 year to 3 years	5.75	5.75	3.25

ROC M7 331178/81 dt. 7-5-82

NAGARATHAR KURAL